OFFICE OF THE ...
14 JUL 1956
MADRAS

# சிறுவர் தீந்தமிழ் வாசகம்

## BOOK IV

243

243
3-56



TB
031,6 (4)
N55
174936

ற்பதிப்புக் கழகம்

# சிறுவர் தீந்தமிழ் வாசகம்

(நான்காம் புத்தகம்)

[நான்காம் வகுப்புக்குரியது]

ஆசிரியர் :

சி. ஜம்புலிங்கம், M.A., L.T.

பதிப்பாளர் :

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

53-56, பவழக்காரத் தெரு :: சென்னை-1

பதிப்புரிமை] 1955 [விலை அணா 9

முதல் பதிப்பு: அக்டோபர் 1955

174936

The Progressive Printers, Madras—1.

# பொருள் அடக்கம்


| எண் | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | தமிழ் நாடு (பாட்டு) | .... | 1 |
| 2. | சென்னைக் கடற்கரை | .... | 4 |
| 3. | என் குறிப்புப் புத்தகம் | .... | 6 |
| 4. | எங்கள் ஊர் வைத்தியசாலை | .... | 9 |
| 5. | கொட்டு முரசே! (பாட்டு) | .... | 12 |
| 6. | உயிர்க்காட்சிச் சாலை | .... | 15 |
| 7. | தென்னை | .... | 19 |
| 8. | தேகப்பயிற்சி | .... | 23 |
| 9. | எறும்புகள் (பாட்டு) | .... | 26 |
| 10. | சிங்கமும் எருதுகளும் (படப் பயிற்சி) | .... | 29 |
| 11. | உலகில் உள்ள பெரிய அணை | .... | 30 |
| 12. | நூல் நிலையமும் வாசக சாலையும் | .... | 33 |
| 13. | திலக்கரி (சுயசரிதை) | .... | 37 |
| 14. | மகாபலி புரம் | .... | 41 |
| 15. | தியாகச் சிந்தை (கதைப் பாட்டு) | .... | 45 |
| 16 | காகிதமும் அதன் பயனும் | .... | 48 |
| 17. | கடிதம் எழுதுதல் | .... | 51 |
| 18. | பழமொழிகள் | .... | 55 |
| 19. | சுவிட்ஸர்லாந்து வீரன்—I | .... | 57 |
| 20. | சுவிட்ஸர்லாந்து வீரன்—II | .... | 60 |
| 21. | சான்றோர் உரை நடை | .... | 64 |
| 22. | பண்டித நேருஜி | .... | 67 |
| 23. | நகராண்மைக் கழகம் | .... | 71 |
| 24. | மீன் | .... | 75 |
| 25. | பெற்றோர் அன்பு (பாட்டு) | .... | 79 |
| 26. | கோவூர் கிழார் (நாடகம்) | .... | 82 |
| 27. | படம் பார்த்துக் கட்டுரை எழுதுதல் | .... | 86 |
| | செய்யுட் பாடம் | .... | |
| 1. | வாக்குண்டாம் | .... | 87 |
| 2 | நல்வழி | .... | 88 |
| 3. | சதகங்கள் | .... | 90 |
| 4. | விவேக சிந்தாமணி | .... | 91 |



# 1. தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும்
  போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது
  காதினிலே;—எங்கள்
தந்தையர் நாடென்ற
  பேச்சினிலே—ஒரு
சத்தி பிறக்குது
  மூச்சினிலே. 1

காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி—என
மேவிய ஆறு பலஓடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு. 2

நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம்செய் குமரிஎல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு. 3

கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்வித மாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசும் தமிழ்நாடு. 4

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதி காரமென்று—ஓர்மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு. 5

—சுப்பிரமணிய பாரதியார்

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| செந்தமிழ் | காவிரி | பொருநை நதி | தவம் |
| தேன் | தென்பெண்ணை | திருமேனி | குமரி எல்லை |
| தந்தையர் | பாலாறு | செழித்த | மாலவன் |
| சக்தி | வையை | திரைக்கடல் | குன்றம் |
| மண்டி | கம்பன் | சாத்திரம் | பார் |
| வள்ளுவன் | வான் புகழ் | அள்ளும் | சிலப்பதிகாரம் |

மணி ஆரம்

## அரும்பதவுரை :

சத்தி - வன்மை, தந்தையர் - தகப்பன்மார், மேவிய- பொருந்திய, திருமேனி - அழகிய உருவம், திரை - அலை, மாலவன் குன்றம் -திருவேங்கடமலை (திருப்பதி), மண்டி- நெருங்கி, சாத்திரம் - நூல், பார் - பூமி, வான் - பெரிய, நெஞ்சு - மனம், அள்ளும் - கவரும், மணி - அழகிய, ஆரம் - மாலை.

## பயிற்சி :

நீ வசிக்கும் ஊரின் சிறப்பினைக் குறித்து நான்கு அல்லது ஐந்து சிறு வாக்கியங்கள் எழுது.

## கேள்விகள் :

1. தமிழ் நாட்டில் உள்ள ஆறுகள் எவை ?
2. தமிழ் நாட்டின் எல்லைகள் எவை ?
3. வள்ளுவன், கம்பன்—இவர்கள் இயற்றிய நூல்கள் எவை ?
4. சிலப்பதிகாரம் எப்படிப்பட்ட நூல்? அதை இயற்றியவர் யார் ?

## 2. சென்னைக் கடற்கரை

1. உலகில் உள்ள கடற்கரைகளில் இரண்டாவது என்று கூறும் சிறப்பு வாய்ந்தது சென்னைக் கடற்கரை. இது மிகுந்த நீளமும், அகலமும் வாய்ந்த மணற்பரப்புடையது. இதனை அடுத்துக் கருங்கப்பியிட்டுச் செப்பனிடப்பட்ட பெரிய சாலை ஒன்று செல்லுகிறது. சாலையின் கீழ்ப்புறம் மக்கள் உலாவ அழகிய நடைப்பாதைகள் அமைந்துள்ளன. அவற்றை அடுத்தாற்போலப் பல வகை அழகிய மலர்கள் பூத்துக் காட்சியளிக்கும் செடிகளும் மரங்களும் உடைய பூங்கா நெடுந்தூரம் செல்லும்.



2. சாலையின் மறு பக்கம் கல்லூரிகள், சர்வகலாசாலை, அரசாங்க அலுவல் அகங்கள், கோட்டை, உயர்நீதி மன்றம், பாங்குகள் முதலியன உள்ளன. அக்கட்டடங்கள் காண்பவர் மனத்-

தைக் கவரும். திருவல்லிக்கேணிக் கடற்கரை 'மெரினு பீச்சு' என்று கூறப்படும்.

3. அங்கு மாலையில் ஏராளமான மக்கள் கூடி இருக்கும் காட்சி பார்க்கத் தகுந்தது. சிறுவரும் சிறுமியரும் கடற்கரை மணலில் விளையாடி இன்புறுவர். ஆண்களும் பெண்களும் அமர்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். சில்லென்று வீசும் கடற்காற்றும் இனிய வானொலியின் இசைப்பாட்டும் மக்களை இன்பமூட்டி வரவேற்கும். நிலாக் காலங்களில் மக்கள் நெடுநேரம் அங்குக் கழிப்பார்கள். அது ஒரு திருவிழாக் காட்சி போல நமக்குத் தோன்றும்.

4. நடைப்பாதை ஓரங்களில் வரிசையாகக் கண்ணுக்கு எட்டிய தூரம் எண்ணற்ற மோட்டார்கள் நிற்கும். நீல நிறச் சோதி விளக்குகள் இரவில் ஒளி தரும் காட்சி, நம் மனத்தைப் பரவசம் அடையச் செய்யும். நடைப்பாதைகளில் ஏராளமான மக்கள் மகிழ்ந்து உரையாடிச் செல்வார்கள்.

5. இத்தகைய கடற்கரை இயற்கைச் செல்வங்களில் ஒன்று அல்லவா? ஏழைகள், செல்வர்கள், இளைஞர்கள், வயோதிகர்கள் யாவரும் வேறுபாடின்றிக் கண்டு மகிழ்வதற்குரிய பொது இடம் கடற்கரை ஒன்றே.

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| கடற்கரை | கப்பி | செப்பனிட்ட | பூங்கா |
| நடைப்பாதை | காட்சி | சாலை | கல்லூரி |
| சர்வகலாசாலை | அலுவலகம் | நீதி மன்றம் | பாங்குகள் |
| மெரினு | சிறுமியர் | வானெலி | இசைப்பாட்டு |
| திருவிழா | காட்சி | ஏராளமாக | ஒளி |
| பரவசம் | இயற்கை | இளைஞர் | களிப்பு |

அரும்பதவுரை :

செப்பனிட்ட - பழுதுபார்த்த, பூங்கா - பூஞ்சோலை, கல்லூரி - உயர் படிப்பகம், சர்வ கலாசாலை-பல கலைகள் பயிலுமிடம், அலுவலகம் - காரியாலயம், நீதி மன்றம் - நியாயசபை, பாங்குகள் -நிதி நிலையங்கள், மெரினு - கடற்கரை, சிறுமியர் - பெண்குழந்தைகள், திருவிழா - உற்சவம்.

பயிற்சி :

1. இயற்கை, வானெலி, இசைப்பாட்டு, பூங்கா, நடைப்பாதை—இச்சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுது.

2. இயற்கை, சிறுமியர், ஏராளமாக, களிப்பு—எதிர் மொழி கூறு.

கேள்விகள் :

1. சென்னைக் கடற்கரையின் சிறப்புக்களுள் மூன்று எவை?

2. 'மெரினு பீச்சு' என்பது எதற்குப் பெயர்?

3. கடற்கரைக்கு மக்கள் ஏன் செல்லுகின்றார்கள்?

---

# 3. என் குறிப்புப் புத்தகம்

[மதிவாணன் பள்ளியிலிருந்து வந்ததும் மேஜையின் அருகே அமர்ந்து ஏதோ அவசரமாக எழுதுகிருன்.]

**தந்தை :** மதிவாணு, நான் நேற்று உனக்குக் குறிப்புப் புத்தகம் வாங்கிக் கொடுத்தேனே! அதில் ஏதாகிலும் நிகழ்ச்சி குறித்துள்ளாயா?

**மதிவாணன் :** அதைத்தான் இப்பொழுது எழுதிக்கொண்டிருக்கிறேன் அப்பா.

**தந்தை :** மிகவும் நல்லது மதிவாணு! காப்பி அருந்திவிட்டு எழுதலாமே!

**மதிவாணன் :** இல்லையப்பா, எங்கள் ஆசிரியர் கண்ட நிகழ்ச்சியையும் அதினின்று உதிக்கும் நீதியையும் உடனே எழுதும்படி கூறியுள்ளார்.

**தந்தை :** சரி; அப்படியே செய். குறிப்பு எழுதி முடித்ததும் எனக்குப் படித்துக்காட்டுகிருயா?

**மதிவாணன் :** அப்படியே செய்கிறேன் அப்பா!

[மதிவாணன் எழுதி முடித்து, காப்பி அருந்தி, தான் எழுதியதைத் தந்தையாரிடம் படித்துக் காட்டு-கிருன்.]

**நிகழ்ச்சி :**

இன்று மாலே பள்ளி விட்டதும் நான் என் நண்பர் சிலரோடு வீட்டுக்கு வந்துகொண்டிருந்-தேன். வழியில் என் நண்பன் சுந்தரம் கோலி விளேயாடிக்கொண்டிருந்த கெட்ட பிள்ளேகளோடு சேர்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான். நானும் மற்ற நண்பர்களும் எவ்வளவு தடுத்தும் அவன் அவ்விடத்தைவிட்டு நகரவில்லே. திடீரென்று ஒரு போலீஸ் சேவகர் வந்து அங்கு இருந்த பிள்ளே-களேப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்ருர். சுந்தரம் அழுதுகொண்டே சென்ருன். நாங்கள் ஓடிச்சென்று இச்செய்தியைச் சுந்தரத்-தின் தகப்பனரிடம் கூறினேம். அவர் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று சுந்தரத்தை மீட்டு வந்தார்; எங்களுக்கும் நன்றி கூறினர்.

**நீதி :** துஷ்டரோடு சகவாசம் செய்தல் கூடாது.

**புதிய சொற்கள் :**

| | | | |
|---|---|---|---|
| அமர்ந்து | நண்பன் | மீட்டு | நிகழ்ச்சி |
| மாலே | போலீஸ் | நீதி | துஷ்டர் |
| சேவகர் | ஸ்டேஷன் | செய்தி | நன்றி |

### அரும்பதவுரை :

அமர்ந்து - உட்கார்ந்து, நிகழ்ச்சி - நடப்பு, நீதி - நியாயம், நண்பன் - சிநேகிதன், மாலை - சாயங்காலம், துஷ்டர் - கெட்டவர், மீட்டு - விடுதலை செய்து.

### பயிற்சி :

### இலக்கணம் :

1. போலீஸ் சேவகர் பிள்ளைகளைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் சென்றார்.

(1) இவ்வாக்கியத்தில் 'அழைத்துச் சென்றார்' என்பது பயனிலை. ஒரு வாக்கியத்தின் முடிவைக் கூறும் சொல் பயனிலை.

(2) பயனிலைக்கு முன் 'யார்' என்ற சொல்லை அமைத்துக் கேள்வி கேட்டால், 'போலீஸ் சேவகர்' என்னும் விடை வரும். அதுவே எழுவாய். எழுவாய் என்பது தொழிலைச் செய்யும் கருத்தா.

(3) பயனிலைக்கு முன் 'யாரை' என்ற சொல்லை வைத்துக் கேள்வி கேட்டால், செயப்படுபொருள் தோன்றும். "யாரை அழைத்துச் சென்றார்?" என்னும்போது 'பிள்ளைகளை' என்னும் விடை வருகிறது. இதுவே செயப்படுபொருள். செயப்படுபொருள் என்பது கருத்தா செய்யும் தொழிலின் பயனை அடைவது.

வாக்கியத்தின் முக்கிய உறுப்புக்கள் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவை.

2. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செயப்படுபொருளைக் குறிப்பிடு :—

(1) கமலம் பாட்டைப் பாடினாள்.
(2) போலீஸ் சேவகர் திருடனைப் பிடித்தனர்.
(3) பசு புல்லை மேய்ந்தது.
(4) இராமன் கடைக்குச் சென்று பழத்தை வாங்கி வந்தான்.

கேள்விகள் :

1. ஆசிரியர் மதிவாணனுக்குக் கூறியது என்ன ?
2. சுந்தரம் ஏன் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டான் ?
3. சுந்தரத்தைப் போலீஸ் ஸ்டேஷனிலிருந்து மீட்டு வந்தவர் யார் ?
4. நீ இப்பாடத்திலிருந்து அறிந்த நீதி யாது ?

---

# 4. எங்கள் ஊர் வைத்தியசாலை

1. எங்கள் ஊர் திங்களூர். ஊரின் நடுவில் ஓர் வைத்தியசாலை இருக்கிறது. அதை எங்கள் ஊராண்மைக் கழகம் சிறந்த முறையில் நடத்திவருகிறது. ஊரார் நோயைப் போக்க அது உதவுகிறது. சுற்றுப்பக்கக் கிராம மக்களும் அங்கு வந்து சிகிச்சை பெற்றுச் செல்வார்கள்.

2. வைத்தியசாலை மிக விசாலமான கட்டடம். அதைச் சுற்றி அழகிய செடிகளும் மரங்களும் வளர்க்கப்பட்டிருக்கின்றன. ஒரு பெரிய கூடமும் அதைச் சுற்றி நான்கு பெரிய அறைகளும் உள்ளன. முன் புறத்தில் தாழ்வாரம் உள்ளது. அங்கு நோயாளிகள் அமரப் பல பெஞ்சுகள் இடப்பட்டுள்ளன. அங்கு ஒரு வைத்தியரும் மருந்தளிக்கும் கம்பவுண்டரும், காயச் சிகிச்சை செய்பவர்களும், தாதியர்களும் இருக்கின்றார்கள்.

3. கூடத்தின் மத்தியில் வைத்தியர் அமர்ந்திருக்கிறார். ஒரு பக்கம் பெண்களும் மறு பக்கம் ஆண்களும் ஒவ்வொருவராக அவரிடம் செல்லுகிறார்கள். அவர் நோயாளிகளின் உடலைச் சோதனை செய்து, ஒரு சீட்டில் மருந்து எழுதிக்

கொடுக்கிறார். அவர்கள் அதை எடுத்துக்கொண்டு போய் எதிர் அறையில் உள்ள கம்பவுண்டரிடம் கொடுக்கின்றனர். கம்பவுண்டர் சீட்டைப்பெற்று, தகுந்தபடி மருந்துகளைக்கலந்து கொடுக்கிறார். அதைப் பெற்று நோயாளிகள் வீடு செல்கின்றார் கள்.

4. மற்றோர் அறையைப் பார். அங்குக் காயச் சிகிச்சை செய்யப்படுகிறது. காயம் பட்ட



ஒருவருக்குத் தலையில் கட்டுக் கட்டப்படுகிறது. பெண்களுக்கும் தனியே காயச் சிகிச்சை செய்யப்-படுகிறது. அறுவை வைத்தியம் செய்வதற்கு மாத்-திரம் வைத்தியர் அங்கு வருவார்.

5. எங்கள் ஊர் வைத்திய சாலையில் தினம் சுமார் முந்நூறு பேருக்குக் குறையாமல் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். எங்கள்

ஊர் வைத்தியர் மிகவும் நல்லவர். அவர் நோயாளிகளைப் புன்னகையோடு வரவேற்று, கவனத்துடன் பரீட்சை செய்து மருந்தளிப்பார்; ஏழை பணக்காரர் என்ற வித்தியாசம் பார்ப்பதில்லை; யார் அவசரமாக அழைத்தாலும் எந்நேரத்திலும் தடை சொல்லாமல் போவார்.

6. வைத்தியர் ஓய்ந்த நேரங்களில் ஊராருக்குச் சுகாதார விதிகளைத் தெரிவிப்பார். அவரைப் போலவே தாதியரும் பெண்களுக்குப் போதிப்பர்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| வைத்தியசாலை | ஊராண்மைக் கழகம் | சிகிச்சை |
| விசாலம் | கட்டடம் | கூடம் |
| அறை | தாழ்வாரம் | வைத்தியர் |
| காயம் | தாதியர் | சோதனை |
| சீட்டு | கம்பவுண்டர் | அறுவை வைத்தியம் |
| புன்னகை | பரீட்சை | சுகாதாரம் |
| விதிகள் | போதிப்பர் | வரவேற்று |

அரும்பதவுரை :

விசாலம் - இடப் பரப்பு, காயம் - அடிபட்ட புண், கம்பவுண்டர் - மருந்து கொடுப்பவர், விதிகள் - சட்டங்கள், தாதியர் - நோயாளிகளுக்கு உதவி புரியும் பெண்கள், சோதனை - பரீட்சை, புன்னகை - புன்சிரிப்பு, போதிப்பர் - கற்பிப்பர்.

பயிற்சி :

1. (1) கம்பவுண்டர் நோயாளிகளுக்குத் தகுந்தபடி மருந்தைக் கலந்து கொடுக்கிறார்.

(2) வைத்தியர் நோயாளிகளைப் புன்னகையோடு கவனிப்பார்.

(3) வைத்தியர் ஓய்ந்த நேரங்களில் சுகாதார விதிகளைப் போதிப்பார்.

இவ்வாக்கியங்களை முறையே, மருந்து, நோயாளிகள், சுகாதார விதிகள் என்று தொடங்கி மாற்றி எழுது.

2. எதிர் மொழி கூறு:—
ஏழை, விசாலம், இரவு, பெண்கள்.

கேள்விகள்:

1. உங்கள் ஊர் வைத்தியசாலை எங்கு உள்ளது?
2. 'காயச் சிகிச்சை' என்பது என்ன?
3. கம்பவுண்டரின் வேலை என்ன?
4. வைத்தியர் ஓய்ந்த நேரங்களில் செய்யும் பொதுப் பணி யாது?
5. வைத்தியரின் சிறந்த குணங்கள் யாவை?

---

# 5. கொட்டு முரசே!

ஊருக்கு நல்லது சொல்வேன்;—எனக்கு
உண்மை தெரிந்தது சொல்வேன்:
சீருக்கெல் லாம்முத லாகும்—ஒரு
தெய்வம் துணைசெய்ய வேண்டும். 1

சாதிக் கொடுமைகள் வேண்டா;—அன்பு
தன்னில் செழித்திடும் வையம்;
ஆதர வுற்றிங்கு வாழ்வோம்;—தொழில்
ஆயிரம் மாண்புறச் செய்வோம். 2

தெய்வம் பலபல சொல்லிப்—பகைத்
தீயை வளர்ப்பவர் மூடர்.
உய்வது அனைத்திலும் ஒன்றாய்—எங்கும்
ஓர்பொரு ளானது தெய்வம். 3



அன்பென்று கொட்டு முரசே!—மக்கள்
அத்தனை பேரும் நிகராம்.
இன்பங்கள் யாவும் பெருகும்—இங்கு
யாவரும் ஒன்றென்று கண்டால். 4

ஒன்றென்று கொட்டு முரசே!—அன்பில்
ஓங்கென்று கொட்டு முரசே!
நன்றென்று கொட்டு முரசே!—இந்த
நானில மாந்தருக்கு எல்லாம். 5

—சுப்பிரமணிய பாரதியார்

## புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| உண்மை | சீர் | தெய்வம் | துணை |
| சாதி | கொடுமைகள் | வையம் | ஆதரவு |
| மாண்புற | தீ | மூடர் | உய்வது |
| நிகராம் | நானிலம் | மாந்தர் | முரசு |

## அரும்பதவுரை :

சீர் - சிறப்பு, துணை - உதவி, சாதி - பிரிவு, வையம்-உலகம், ஆதரவு - உபகாரம், மாண்புற-பெருமையடைய, தீ - நெருப்பு, மூடர் - அறிவில்லாதவர், உய்வது - பிழைப்பது, நிகர் - சமானம், நானிலம் - உலகம், முரசு - பேரிகை.

## பயிற்சி :

## இலக்கணம் :

1. வாக்கியம் பல வகைப்படும். அவை உடன்பாட்டு வாக்கியம், எதிர்மறை வாக்கியம், வினு வாக்கியம் என்பன.

(1) உடன்பாட்டு வாக்கியம் என்பது, ஒரு காரியம் நிகழ்வதைத் தெரிவிக்கும்.

(உ - ம்.) சுந்தரம் பள்ளிக்கூடம் சென்றான்.

(2) எதிர்மறை வாக்கியம் என்பது, ஒரு காரியம் நிகழாமையைத் தெரிவிக்கும்.

(உ - ம்.) சுந்தரம் பள்ளிக்கூடம் செல்லவில்லை.

(3) வினு வாக்கியம் என்பது, கேள்விப் பொருளைத் தெரிவிக்கும்.

(உ - ம்.) கமலா எங்குச் சென்றாள் ?

2. பின் வரும் வாக்கியங்களின் வகையைக் குறிப்பிடு :—

(1) கமலா பாடம் படிக்கவில்லை.
(2) தம்பி பள்ளிக்குச் சென்றானா?
(3) பிள்ளைகள் தோட்டத்தில் பூப்பறிக்கிறார்கள்.

கேள்விகள் :

1. பாரதியார் யாரை மூடர் என்கிறார்?
2. எது கொடுமை?
3. எப்போது இன்பங்கள் யாவும் பெருகும்?

---

# 6. உயிர்க்காட்சிச் சாலை

1. பெரிய நகரங்களில் உயிர்க்காட்சிச் சாலைகள் உண்டு. காட்டில் வாழும் கொடிய விலங்குகள், பறவைகள், ஊர்வன முதலியவைகளை அங்குக் காணலாம். அவைகளுக்கு ஏற்ற இரும்புக் கம்பிகளால் அமைத்த தனித்தனி கூண்டுகள் இருக்கும். அங்கு நாள்தோறும் மக்கள் திரள்திரளாகச் செல்வார்கள்; காண்பதற்கு அரிய விலங்குகளையும் பறவைகளையும் கண்டு களிப்பார்கள்.

2. உயிர்க்காட்சிச் சாலையில் சிங்கம், புலி, கரடி, யானை முதலிய கொடிய மிருகங்கள் உள்ளன. மான், ஒட்டகம், ஒட்டைச் சிவிங்கி, நரி, குரங்கு முதலிய பிராணிகளும் உண்டு. மயில், பச்சைக் கிளி, பஞ்சவர்ணக் கிளி, கொக்கு, நாரை, அன்னம் முதலிய பறவைகளையும் நாம் அங்குக் கண்டு மகிழலாம்.

3. கூண்டில் சிங்கங்கள் இருப்பதைப் பார். ஆண் சிங்கத்தின் தலையில் அடர்ந்த பிடரி மயிர் இருப்பதைக் கவனி. சிங்கத்தின் நிறம் பழுப்புக் கலந்த மஞ்சள். அதன் கண்கள் பெரியவை;

பற்கள் ஈட்டி போன்றவை. அதன் உறுதியான கால் விரல்களில் வளேந்த கூரிய நகங்கள் இருக்கும். அவற்றின் உதவியால் சிங்கம் மிருகங்களேப் பற்றிக் கொல்லும். சிங்கத்தின் குரல் இடி முழக்கம்போல இருக்கும். அதைக் கர்ச்சனே என்பர். சிங்கம் வலிமை வாய்ந்தது. அதனுல், அதற்கு 'விலங்கரசு, மிருகேந்திரன்' என்னும் பெயர்களும் வழங்குகின்றன.



4. கூண்டில் உள்ள புலியைப் பார். புலி சிங்கத்தைப் போலவே பலம் வாய்ந்த மிருகம். அது யானேயையும் வெல்லக் கூடியது. அதன் கண்கள் இரவில் நெருப்புப் பந்தம் போலப் பிரகாசிக்கும். புலியின் உடலில் கருமையான வரிகள் காணப்படும். அதன் உடல் மங்கலான மஞ்சள் நிறம் உடையது. புலி அடர்ந்த காடுகளி-

லும், மலைகளிலும் வசிக்கும். புலி நாட்டில் புகுந்து ஆடு மாடுகளை அடித்துத் தின்னும்.

5. கரடியைப் பார். அதன் உடல் முழுவதும் கறுத்த மயிர் அடர்ந்திருப்பதைக் கவனி. கரடி மாமிசம் புசிக்காது.

6. யானையைப் பார். அதன் அருகில் பாகன் நிற்கிறான். யானையே மிருகங்களில் பெரியது. யானைக்கு முகத்தில் உறுப்பு ஒன்று தொங்குகிறது அல்லவா? அதற்குத் துதிக்கை அல்லது தும்பிக்கை என்பது பெயர். யானை வாயின் இரு பக்கங்களி-லும் உள்ள தந்தங்களைப் பார். மக்கள் யானையைப் பிடித்துப் பழக்கி அதனிடம் வேலை வாங்குகிறார்-கள்.

7. புல்வெளியில் மான்கள், வரிக்குதிரைகள், ஒட்டைச் சிவிங்கிகள் போன்ற மிருகங்கள் உள்-ளன.

8. கூண்டுகளில் பல வகைப் பறவைகள் இருப்பதைக் கவனி. மயில் தோகையை விரித்-தாடுவது எவ்வளவு அழகாய் இருக்கிறது! உயிர்க்-காட்சிச் சாலைகளில் ஓடைகளும் குளங்களுங்கூட உள்ளன. அவற்றில் அன்னப் பறவைகளும், வாத்துக்களும் நீந்தி விளையாடும். அது பார்ப்பதற்கு மிக விநோதமாகத் தோன்றும்.

9. தம்பி, நீ சென்னை உயிர்க்காட்சிச் சாலைக்கு எப்போதாவது சென்றதுண்டா? இல்லை எனில், உங்கள் ஆசிரியருடன் சென்று அங்குள்ள காட்சிகளைக் கண்டு இன்புறு.

### புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| காட்சிச் சாலை | விலங்கு | ஊர்வன |
| ஒட்டைச் சிவிங்கி | பஞ்சவர்ணக் கிளி | பிடரி மயிர் |
| பழுப்பு | கர்ச்சனை | வலிமை |
| விலங்கரசு | மிருகேந்திரன் | வழங்குகின்றன |
| பந்தம் | வரிகள் | மாமிசம் |
| புசிக்கிறது | துதிக்கை | தந்தம் |
| தோகை | ஓடை | விநோதம் |
| அன்னம் | ஆசிரியர் | காட்சி |

### அரும்பதவுரை :

விலங்கு - மிருகம், ஊர்வன - பாம்பு முதலியவை பஞ்சவர்ணம் - ஐந்து நிறங்கள், பிடரி - கழுத்து, வரி - கோடு, தோகை - மயிற்பீலி, ஓடை - நீர் ஓடும் கால், விநோதம் - வேடிக்கை, காட்சி - தோற்றம், விலங்கரசு, மிருகேந்திரன் - மிருக ராஜாவாகிய சிங்கம், கர்ச்சனை - சிங்கத்தின் முழக்கம்.

### பயிற்சி :

1. விலங்கரசு, மிருகேந்திரன்—பிரித்துக் காட்டு.
2. தனித்தனி, திரள் திரளாக, கர்ச்சனை, விநோதம்—சொந்த வாக்கியங்களில் அமை.

### கேள்விகள் :

1. உயிர்க்காட்சிச் சாலைகள் எங்கு உண்டு ?
2. அங்குள்ள மிருகங்களுள் வலிமை வாய்ந்த மிருகம் எது ? அதற்கு வழங்கும் வேறு பெயர் என்ன ?
3. யானைக்கு உள்ள நூதன உறுப்பு எது ?
4. புலியின் உடல் அமைப்பு எப்படிப்பட்டது ?
5. உனக்குப் பிரியமான பறவைகள் எவை ?

# 7. தென்னை

1. தென்னை மணற்பாங்கான இடங்களில் செழித்து வளரும். அது அறுபது, எழுபது அடி வரை உயர்ந்து வளரும். தென்னைக்குக் கிளைகள் இல்லை; ஓலைகள் உண்டு. ஈச்சமரமும், பனை மரமும், கமுகமரமும் தென்னை இனத்தைச் சேர்ந்தவை. தென்னை பாளை விடும். பாளை வெடித்து விரிந்ததும் அதில் உள்ள பூக்களிற்சில உதிரும். உதிராத பூக்களே காய்களாகும். அக்காய்களின் கொத்தே தென்னங்குலை. ஒரு குலையில் பத்து அல்-



லது பதினைந்து காய்கள் காய்க்கும். தென்னைமரம் ஆறு ஆண்டுகளுக்குள் பலன் கொடுக்கும். ஓராண்டில் தென்னை சுமார் நூறு காய்கள் காய்க்கும்.

2. தென்னை மரம் நமக்குப் பல வகைகளில் பயன் தருகிறது. அதன் முற்றாத காயை இளநீர்

என்கிறோம். இளநீரைக் கோடையில் மக்கள் பருகுவார்கள். முற்றிய காயைத் தேங்காய் என்கிறோம். தேங்காய் ஒரு சிறந்த உணவுப்பொருள். பலவகைத் தின்பண்டங்கள் தேங்காயினால் செய்யப்படுகின்றன.

3. உலர்ந்த தேங்காய்க்குக் கொப்பரை என்பது பெயர். அதைச் செக்கிலிட்டு ஆட்டி நெய் எடுப்பார்கள். தேங்காய் நெய்யைப் பலர் உணவுக்குப் பயன்படுத்துகிறார்கள். அது உடம்புக்கு மிகவும் ஆரோக்கியமானது. விளக்கு எரிக்கவும், சோப்புத் தயாரிக்கவும் தேங்காய் நெய் உபயோகப்படுகிறது. அதைக்கொண்டு பல வகை வாசனைத் தைலங்களைச் செய்கிறார்கள். தேங்காய் நெய் மயிரை வளர்க்கும்; உஷ்ணத்தைப் போக்கும்.

4. தென்னையின் ஒவ்வொரு பாகமும் மக்களுக்கு உபயோகப்படும். இக்காலத்தில் தென்னம்பாளையிலிருந்து சாறு இறக்கிக் காய்ச்சி, வெல்லம் செய்கிறார்கள். பசுமையான ஓலைகளைத் திருமண வீட்டில் பந்தற்கால்களில் சுற்றுகிறார்கள். உலர்ந்த ஓலைகளை முடைந்து வீட்டிற்குக் கூரை அமைக்கிறார்கள். பூக்குடல், தடுக்கு, கூடை முதலியன ஓலையினால் செய்யப்படுகின்றன. தேங்காய்க் கொட்டாங்கச்சியில் மூங்கில் பத்தையை இணைத்து அகப்பை செய்வார்கள்.

5. தேங்காய் நாரினால் கயிறு திரிக்கலாம். தென்னங்கீற்றினால் துடைப்பம் கட்டலாம். தென்னையின் அடிமரத்தை வெட்டிச் சிறு கால்வாய்களைக் கடக்கப் பாலம் அமைக்கலாம். காய்ந்த மரத்தை விறகாகவும் உபயோகிக்கலாம். நம் நாட்டில் திருவாங்கூரில்தென்னை மரங்கள் விசேஷ-

மாக வளர்கின்றன. அங்குள்ள மக்கள் அவற்ருல் பல தொழில்களைச் செய்து பிழைக்கின்ருர்கள்.

6. நாம் தென்னை மரங்களை நீர் பாய்ச்சிச் செழிப்பாக வளர்க்கவேண்டும். அதனுல் நாம் பல நன்மைகளைப் பெறலாம் அல்லவா? தென்னை மரத்தைப் 'பூலோகக் கற்பக விருக்ஷம்' என்றும் கூறுவர்.

புதிய சொற்கள்:

| | | |
|---|---|---|
| மணற்பாங்கு | பாலம் | விசேஷம் |
| உதிரும் | கமுகமரம் | தென்னம்பாளை |
| கொப்பரை | குலை | இளநீர் |
| தயாரித்தல் | ஆரோக்கியம் | நெய் |
| கொட்டாங்கச்சி | தைலம் | சாறு |
| இணைத்து | கூரை | முடைந்து |
| கற்பக விருக்ஷம் | கீற்று | விறகு |

அரும்பதவுரை:

உதிரும் - சிந்தும், கமுகமரம் - பாக்கு மரம், கொப்பரை-முதிர்ந்து உலர்ந்த தேங்காய், ஆரோக்கியம் - உடற்சுகம், தயாரித்தல் - செய்தல், கற்பக விருக்ஷம் - கேட்பதைக் கொடுக்கும் தெய்வலோக மரம், தைலம் - காய்ச்சி வடித்த மருந்து நெய், சாறு - இரசம், கூரை - வீட்டின் இறைப்பு, இணைத்து - சேர்த்து, கீற்று - முடைந்த ஓலை, செழிப்பு - வளம், பாலம்-வாராவதி, முடைந்து - பின்னி.

இலக்கணம்:

1. திணை என்பது பிரிவு. உலகில் உள்ள பொருள்கள் எல்லாம் இரு பெரும்பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை உயர் திணை, அஃறிணை எனப்படும். உயர்ந்த பிரிவு உயர் திணை; தாழ்ந்த பிரிவு அஃறிணை.

2. உயர்திணை என்பது, மக்கள் அல்லது தேவர்களைக் குறிப்பது.

(உ - ம்) மனிதன், தேவன்.

3. அஃறிணை என்பது உயிர் உள்ள அறிவற்ற பொருள்களையும், உயிரில்லாத பொருள்களையும் குறிக்கும்.

(உ - ம்) பசு, மரம், எருது, மலை, செடி, கல், பறவை முதலியன.

4. கீழ் வரும் சொற்களில் உயர்திணையையும் அஃறிணையையும் பிரித்து அட்டவணையில் எழுது :—

நாய், இராமன், குதிரை, சிவன், அரசன், குன்று, கழுதை, யானை.

| உயர்திணை | அஃறிணை |
| --- | --- |
| | |

## கேள்விகள் :

1. தென்னை எங்குச் செழித்து வளரும் ?
2. தென்னையின் வகையைச் சேர்ந்த மரங்கள் எவை ?
3. தென்னை ஓர் ஆண்டில் எத்தனை காய்கள் காய்க்கும்?
4. எதற்குக் கொப்பரை என்பது பெயர் ? அது எதற்குப் பயன்படும் ?
5. தென்னை மரத்தை ஏன் 'கற்பக விருக்ஷம்' என்று கூறுகிறார்கள் ?

# 8. தேகப்பயிற்சி

1. நாம் நோய்நொடி இல்லாமல் வாழ விரும்பினால், தேகப்பயிற்சி செய்ய வேண்டும். கல்வி எப்படி நம் அறிவை வளர்க்கிறதோ, அப்படியே தேகப்பயிற்சி நம் உடலை வளர்க்கிறது. சிறு குழந்தைகளும் கைகளையும் கால்களையும் சதா ஆட்டிக்கொண்டிருப்பதை நீ பார்த்திருப்பாய். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?' என்பது பழமொழி. ஆகையால், இளமையிலிருந்தே தேகப்-



பயிற்சி செய்ய வேண்டும். தேகப்பயிற்சியினால் உடல் உரம் பெற்று, ஞாபக சக்தி அதிகரிக்கும்; நாம் கல்வி அறிவுடன் உடல் உரத்தையும் பெற முடியும்.

2. தேகப்பயிற்சி பல வகைப்படும். நாம் நமது வயதுக்கும் உடலமைப்புக்கும் ஏற்ற தேகப்-

பயிற்சியைச் செய்ய வேண்டும். சிறுவர்கள் ஓடி ஆடி விளையாடலாம்; சடுகுடு முதலிய ஆட்டங்களை ஆடலாம்; தாண்டிக் குதித்தல், துள்ளிக் குதித்தல் முதலிய விளையாட்டுக்களையும் விளையாடலாம். வாலிபர்கள் கர்லாக்கட்டை சுழற்றல் முதலிய பயிற்சிகளைச் செய்து உடல் வலிமையைப் பெறலாம். வயதானவர்கள் காலை மாலை வெளியிற்சென்று உலாவி வரலாம்.

3. தேகப் பயிற்சி செய்வதனல் மக்கள் அடையும் நன்மைகள் பல: இரத்த ஓட்டம் அதிகரிக்கும். கை கால்கள் சோர்வு அடையமாட்டா; உண்ட உணவு செரிக்கும்; நோய்கள் நம்மை அணுகா; ஞாபகச் சத்தி அதிகரிக்கும்; எந்த வேலைகளையும் சுறுசுறுப்பாகச் செய்ய முடியும்; உடல் அழகுடன்விளங்கும். உடலில் உள்ள அழுக்குகள் வியர்வை மூலமாக வெளி வரும்.

4. நாம் காலையிலும் மாலையிலும் தேகப்பயிற்சி செய்யலாம். காற்ரேட்டம் உள்ள விசாலமான இடமே தேகப்பயிற்சி செய்வதற்கு ஏற்றது. உணவு உண்ட பின் தேகப்பயிற்சி செய்தல் கூடாது. உடல் வருந்தும்படி பயிற்சி செய்தல் தீமை விளைக்கும். மிகக் குறைந்த பயிற்சியினலும் நன்மை விளையாது.

5. மாணவர்கள் நன்மைகளைக் கருதியே பள்ளிக் கூடங்களில் தேகப் பயிற்சி போதிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் பலவகைப் பந்தாட்டங்களிலும் விளையாட்டுக்களிலும் மாணவர்களைப் பழக்குகின்ருர்கள். நம் நாட்டில் தேகப்பயிற்சிக் கழகங்கள் பல உள்ளன. அங்குச் சிறந்த பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. மக்கள் திடகாத்திரர்களாய்

விளங்கவேண்டுமானால், தேகப்பயிற்சி அவசியம் செய்தல் வேண்டும். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' அல்லவா?

## புதிய சொற்கள்:

| | | | |
|---|---|---|---|
| தேகப்பயிற்சி | அவசியம் | ஞாபகசத்தி | உரம் |
| வளர்ச்சி | வாலிபர்கள் | இரத்த ஓட்டம் | சோர்வு |
| அணுகா | சுறுசுறுப்பு | வியர்வை | காற்றோட்டம் |
| சதா | திடகாத்திரம் | விசாலம் | அற்ற |

## அரும்பதவுரை:

கரங்கள் - கைகள், பழமொழி - முன்னோர் கூறிய அனுபவ வார்த்தை, இளமை - பிள்ளைப் பருவம், உரம் - வலிமை, ஞாபக சத்தி - மறவாமை, வளர்ச்சி - வளர்தல், சோர்வு - தளர்ச்சி, அணுகா - நெருங்க மாட்டா, திடகாத்திரம் - உறுதியான உடல், அவசியம் - முக்கியம்.

## பயிற்சி:

1. கீழ் வரும் சொல் தொடர்களைப் பிரித்துக் காட்டு:—

    காற்றோட்டம், இளமையிலிருந்து,
    வயதானவர்கள், நோயற்ற.

2. கீழ் வரும் சொற்களைச் சொந்த வாக்கியத்தில் அமைத்துக் காட்டு:—

    நோய் நொடி, உரம்,
    அணுகா, திடகாத்திரம்.

3. இளமை, சுறுசுறுப்பு, வளர்ச்சி—எதிர்மொழி கூறு.

கேள்விகள் :

1. குழந்தைகள் எவ்விதம் தேகப்பயிற்சி செய்கின்றன ?
2. தேகப்பயிற்சி வகைகள் எவை ?
3. தேகப்பயிற்சியினால் மக்கள் அடையும் நன்மைகள் எவை ?
4. நாம் எங்குத் தேகப்பயிற்சி செய்ய வேண்டும் ?

---

# 9. எறும்புகள்

புற்றில் வாழும் எறும்புகளே !
புதுமை யான எறும்புகளே !
சற்றும் உமக்கு ஓய்வுண்டோ ?
சரிநிகர் உலகில் பிறருண்டோ ? 1

சாரை சாரை யாய்ச்சென்று
சலியா வீரர் தமைப்போலப்
பாரைச் சுற்றி வலம்வருவீர் ;
பருவ மழையில் புற்றுறைவீர். 2

சுற்றி எங்கும் திரிந்திடுவீர் ;
சோம்பல் இன்றி வாழ்ந்திடுவீர் ;
பற்றி வாயில் தானியத்தைப்
பாங்காய்த் தொகுத்துக் குவித்திடுவீர். 3

உழைப்பின் பெருமை நீர்அறிவீர் ;
ஒன்றாய்க் கூடிப் பணிசெய்வீர் ;
தழைக்கப் பொருளைத் தேடிடுவீர் ;
தக்கோர் போல வாழ்ந்திடுவீர். 4

நாளும் உழைத்தே நலம்பெறுவீர் ;
நண்ணி எங்கும் இரைகொணர்வீர் ;
தாளும் உமக்கு நோகாவோ !
தாகம் பசிநோய் வாராவோ ! 5

பகையும் வெறுப்பும் உமக்கில்லை ;
பாரில் குலவி வாழ்ந்திடுவீர் ;
வகைவகை யாகப் பணிபுரிந்தே
வாழ்க்கைப் பயனை நுகர்ந்திடுவீர். 6

உங்களைப் போல நாங்களினி
உழைப்பின் பெருமை உணர்வோமே ;
தங்குத லின்றி நற்பணிகள்
தயங்கா தென்றும் புரிவோமே ! 7

— வித்துவான் கிருஷ்ணமூர்த்தி

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| புற்று | புதுமை | சற்றும் | நுகர்த்திடுவீர் |
| நிகர் | சாரை | வீரர் | ஓய்வு |
| வலம் வருதல் | சோம்பல் | தானியம் | பார் |
| உழைப்பு | பெருமை | தொகுத்து | குவித்திடுவீர் |
| தக்கோர் | நண்ணி | பணி | தழைக்க |
| தாள் | தாகம் | நலம் | இரை |
| குலவி | வகை | பகை | வெறுப்பு |

அரும்பதவுரை :

புதுமை - அதிசயம், சற்றும் - சிறிதும், நிகர் - சமானம், பார் - பூமி, வலம் வருதல் - வலப்பக்கமாகச் சுற்றி வருதல், தொகுத்து - திரட்டி, குவித்திடுவீர் - குவியலாக்குவீர், பணி - வேலை, தழைக்க - வளர, தக்கோர் - மேலோர், நாளும் - தினந்தோறும், நலம் - நன்மை, நண்ணி - அடைந்து, இரை - ஆகாரம், தாள் - கால், வெறுப்பு - மனக்கசப்பு, குலவி - மகிழ்ந்து, நுகர்ந்திடுவீர் - அனுபவிப்பீர், தயங்காது - தாமதியாமல்.

## பயிற்சி:

### இலக்கணம்:

1. 'எண்' என்பது இரு வகைப்படும். அவை ஒருமை எண், பன்மை எண் என்பன. ஒரு பொருளைக் குறிப்பது ஒருமை; ஒன்றுக்கு மேல் உள்ள பொருளைக் குறிப்பது பன்மை.
   (உ-ம்.) பழம் - ஒருமை, பழங்கள் - பன்மை
2. இடம் மூன்று வகைப்படும். அவை, தன்மை, முன்னிலை, படர்க்கை என்பன.
   (உ-ம்.) நான், நாம், நாங்கள் - தன்மை இடம். பேசுபவரைக் குறிக்கும் சொற்கள் எல்லாம் தன்மை இடத்திற்கு உரியவை.
   (உ-ம்.) நீ, நீர், நீங்கள் - முன்னிலையிடம். முன் நின்று கேட்பவரைக் குறிக்கும் சொற்கள் எல்லாம் முன்னிலையிடத்திற்கு உரியவை. தன்மை, முன்னிலை அல்லாத சொற்கள் எல்லாம் படர்க்கையிடத்திற்கு உரியவை.
   (உ-ம்.) அது, அவன், அவள், அவை, மரம், மலை முதலியன.

### கேள்விகள்:

1. எறும்புகள் எங்கு வாழும்?
2. எறும்புகள் வாழ்க்கைப் பயனை எவ்வாறு அடைகின்றன?
3. எறும்புகளிடமிருந்து நாம் அறிந்துகொள்ளும் நீதி என்ன?

# 10. சிங்கமும் எருதுகளும்

படத்தைப் பார்த்துக் கதையைச் சொல்:



# 11. உலகில் உள்ள பெரிய அணை

1. மக்கள் வாழ்க்கைக்கு நீர் அவசியம். நீரில்லாமல் ஒரு காரியமும் உலகில் நடைபெருது. பயிர்கள் செழித்தோங்க நீர் தேவை. நீர் நமக்கு மழையினுல் கிடைக்கிறது. மழை சில காலங்களில் சரியாகப் பெய்வதில்லை. அதனுல், மக்கள் ஏரிகளை-யும் பெரிய அணைகளையும் கட்டி நீரைத் தேக்கி வந்தார்கள். பெரிய நதிகளின் நீரெல்லாம் முடிவில் கடலில் சென்று கலக்கின்றன. ஆகையால், மக்கள் நதிகளின் குறுக்கே பெரிய அணைகளிட்டு நீரைத் தேக்கி வந்தார்கள்.

2. நம் தமிழ் நாட்டில் காவிரி நதியின் நீரைத் தேக்கி அணைகள் கட்டப்பட்டுள்ளன. அவை கண்ணம்பாடி அணை, மேட்டூர் அணை என்பவை. இவற்-றுள் மிகவும் பெரியது மேட்டூர் அணையாகும். இது சேலம் ஜில்லாவின் அருகில் உள்ள மேட்டூர் என்னும் இடத்தில் கட்டப்பட்டுள்ளது. இது மிகுந்த பொருட்செலவில் கட்டப்பட்டது. இது உலகி-லேயே பெரிய அணை என்று எல்லோராலும் புகழப்-படுவது. காவிரியின் குறுக்கே ஒரு மைல் தூரமும் இருபது அடி உயரமுமுள்ள அணை இட்டு நீர் தேக்-கப்பட்டுள்ளது.

3. அணையில் பல மதகுகள் அமைக்கப்பட்-டுள்ளன. அவற்றிலிருந்து வெளி வரும் நீர் பல கால்வாய்கள் வழியாகச் சென்று வயல்களுக்குப் பாய்ச்சுதற்குப் பயன்படுகிறது. தஞ்சையில் உள்ள பல ஏக்கர் நிலங்களுக்கு இதனுல் நீர் பாய்ச்சப்படு-கிறது. இதனுல், தரிசு நிலங்கள் எல்லாம் செழிப்-புள்ள நிலமாய் மாறியுள்ளன. இந்தத் தேக்க

நீரைக்கொண்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. பல ஜில்லாக்களுக்கு இதனல் மின்சார விளக்கு வசதி ஏற்பட்டுள்ளது.



4. இப்படிப்பட்ட சிறந்த அணையைக் கட்டி முடிக்க ஆறு வருடங்கள் ஆயின. பல ஆயிரக் கணக்கில் தொழிலாளர்களும், கட்டடக் கலைஞர்களும் இரவும் பகலும் வேலை செய்து வந்தார்கள். கருங்கல் சிமிட்டிக் கலவை முதலியவை இதற்குப் பயன்பட்டன. இவ்வணையினல் மேட்டூர் ஒரு பெரிய நகரமாயிற்று. தொழிலாளர்களும், உத்தியோகஸ்தர்களும் அங்கு வசிக்கத் தொடங்கினர்கள். பெரிய வீதிகளும், அழகிய கட்டடங்களும் தோன்றின. பள்ளிக்கூடங்களும், நந்தவனங்களும் அமைக்கப்பட்டன. மின்சார விளக்குகள், குடி நீர்க் குழாய்கள் முதலிய வசதிகள் யாவும் அங்கு உள்ளன.

இப்பொழுது மேட்டூர் ஒரு நகரமாகவே காட்சி அளிக்கின்றது.

5. மேட்டூர் அணை ஏழு கோடி ரூபாய்ச்செல-வில் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வணையைக்காணத் தினந்தோறும் நம் நாட்டின் பல பகுதியிலிருந்து மக்கள் வருகின்றார்கள். மாணவர்களின் உல்-லாசப் பிரயாணத்திற்கு இது ஒரு சிறந்த இட-மாகும். இவ்வணையின் மேல் நின்று பார்த்தால், கண்ணுக்கெட்டிய தூரம் கடல் போல நீர் தெரி-யும். இக்காட்சி கண்டவர் மனத்திலிருந்து என்-றும் நீங்காது.

### புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| அணை | அருகில் | காவிரி | குறுக்கு |
| தரிசு நிலம் | மதகு | கால்வாய் | ஏக்கர் |
| மின்சாரம் | உற்பத்தி | ஜில்லாக்கள் | வசதி |
| கலைஞர்கள் | இயந்திரம் | கூம்புகள் | நந்தவனம் |
| தொகை | தேக்கப்பட்டுள்ளது | | உல்லாசம் |

### அரும்பதவுரை :

அணை - நீர்த்தேக்கம், அருகில்-சமீபத்தில், மதகு - நீரை வெளி விடும் வழி, வசதி - சௌகரியம், நந்தவனம்-பூந்தோட்டம், தொகை - பணம், தரிசு நிலம்-பாழ் நிலம்.

### பயிற்சி :

1. எதிர் மொழி கூறு :—
   குறுக்கு, அருகு, உற்பத்தி.
2. கீழ் வரும் சொற்களைச் சொந்த வாக்கியத்தில் அமைத்துக் காட்டு :—
   மின்சாரம், ஏக்கர், தரிசு நிலம்,
   தொகை, மதகுகள்.

3. நீரை, மின்சாரம், செய்யப்படுகிறது, ஜில்லாக்களுக்கு விளக்கு, ஏற்பட்டுள்ளன, அணையை, முடிக்க, வருடங்கள்—இச்சொற்களைத் தகுந்தபடி கீழ்க்காணும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் அமை :—

(1) இத்தேக்கத்தின் ——— கொண்டு ——— உற்பத்தி———.

(2) பல ——— மின்சார ——— வசதிகள்———

(3) ———கட்டி———ஆறு———பிடித்தன.

**கேள்விகள் :**

1. 'அணை' என்பது என்ன ?
2. தமிழ் நாட்டில் உள்ள அணைகள் எவை ?
3. அணையினால் உண்டாகும் நன்மைகள் யாவை ?

---

# 12. நூல் நிலையமும் வாசக சாலையும்

1. பள்ளிக்கூடத்தில் நூல் நிலையம் உண்டு. அங்குப் பல பீரோக்கள் இருக்கும். அவைகளில் விஞ்ஞானம், சரித்திரம், பூகோளம், தொழில், விவசாயம் முதலியவை சம்பந்தமான பல புத்தகங்கள் வைக்கப்பட்டிருக்கும். நூல் நிலையத்தைக் கண்காணிக்க ஓர் ஆசிரியரும் இருப்பார். அவர் மேஜையின் மேல் புத்தகங்களின் பெயர்கள் அடங்கிய ஒரு குறிப்புப் புத்தகம் இருக்கும். அதை நாம் படித்துப் பார்த்து, நமக்கு விருப்பமான புத்தகத்தை வாங்கிப் படிக்கலாம்.

2. இது போலவே அரசாங்கத்தாராலும் ஊராள் மன்றத்தாராலும் பொது நூல் நிலையங்-

கள் ஏற்பட்டுள்ளன. சென்னையில் எழும்பூரில் உள்ள **கன்னிமாரா நூல் நிலையம்** மிகவும் பெரியது. அது அரசாங்க நூல் நிலையம். அங்குப் பல துறைகளில், பல பாஷைகளில் எழுதப்பட்ட நூல்கள் இலட்சக்கணக்கில் உள்ளன. மக்கள் தங்கள் ஓய்வு நேரங்களில் அங்குச் சென்று தங்களுக்கு விருப்பமான புத்தகங்களை வாங்கிப் படிப்பார்கள்.




3. நூல் நிலையங்களில் அமைதி நிலவும். அங்கு எவரும் சத்தம் செய்ய மாட்டார்கள். படிப்பவர்களுக்கு ஏற்ற இடவசதியும் உண்டு. அவரவர்களுக்கு விருப்பமான புத்தகங்களைப் படித்து இன்புறுவார்கள். சிலர் அரிய விஷயங்களைப் பற்றிக் குறிப்பு எழுதிச் செல்வர். இதனால், மக்கள் அறிவு ஓங்கும்; நாட்டின் கலை வளர்ச்சி அதிகரிக்கும். நம் முன்னோர்களும் நூல் நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள். தஞ்சாவூரில் சரஸ்வதி

மஹாலில் உள்ள நூல் நிலையம் மிகவும் பழமையானது.

4. நூல் நிலயத்தைப் போலவே வாசகசாலையும் மக்களுக்கு அறிவை விருத்தி செய்யப் பயன்படும். வாசகசாலையிலும் பல மொழிகளில் வெளிவரும் தினசரிப்பத்திரிகை, மாதப் பத்திரிகை, வாரப் பத்திரிகை முதலியவை இருக்கும். அவற்றைப் படித்து மக்கள் உலகில் நடக்கும் அரசியல் விஷயங்களையும் பொது நிகழ்ச்சிகளையும் அறியலாம். பல நாடுகளில் நடைபெறும் தொழில், விவசாயம் முதலியவற்றையும் உணரலாம்.

5. நூல் நிலயம், வாசகசாலை இவற்றின் நன்மைகளை நாம் அறிந்துகொண்டோம். இனி நாம் வாளா இருத்தல் கூடாது; ஒழிந்த வேளைகளில் அங்குச் சென்று படிப்பது நல்லது.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| நூல் நிலையம் | பீரோக்கள் | சாத்திரம் |
| விஞ்ஞானம் | பூகோளம் | விவசாயம் |
| கண்காணிக்க | விருப்பமான | அரசாங்கத்தார் |
| ஊராள் மன்றம் | துறைகள் | பல துறை |
| அமைதி | நிலவும் | இன்புறுவர் |
| கலை வளர்ச்சி | மஹால் | பழக்கவழக்கங்கள் |
| வாசகசாலை | தினசரிப்பத்திரிகை | அரசியல் |
| புதுமைகள் | வாளா | நிகழ்ச்சிகள் |

அரும்பதவுரை :

பூகோளம் - பூமிசாத்திரம், சாத்திரம் - நூல், விஞ்ஞானம் - இயற்கை ஆராய்ச்சி நூல், விவசாயம் - பயிர்த்

தொழில், கண்காணிக்க - மேற்பார்வையிட, அமைதி - சந்தடியின்மை, நிலவும் - விளங்கும், பல துறை-பல வழிகள், மஹால் - பெரிய அரண்மனை, புதுமைகள் - அற்புதங்கள், வாளா - வீணுக, நிகழ்ச்சி - சம்பவம்.

## பயிற்சி:

### இலக்கணம் (பால்)

1. பால் ஐந்து வகைப்படும். உயர்திணைக்கு உரிய பால்கள், ஆண்பால், பெண்பால், பலர்பால் எனமூன்றுகும்; அஃறிணைக்குரிய பால்கள், ஒன்றன்பால், பலவின்பால் என இரண்டாகும்.

ஆண்பால், ஒரு மனிதனைக் குறிப்பது.
(உ-ம்.) அவன், இராமன்

பெண்பால், ஒரு பெண்ணைக் குறிப்பது.
(உ-ம்.) அவள், சீதை

பலர்பால், ஒன்றுக்கு மேற்பட்ட ஆணையோ, பெண்ணையோ, அல்லது ஆண் பெண் இருபாலாரைக் கலந்தோ குறிப்பது.
(உ-ம்.) மனிதர்கள், பெண்கள், மக்கள்

ஒன்றன்பால், ஒரே பொருளைக் குறிப்பது.
(உ-ம்.) மரம், ஆடு,அது

பலவின்பால், ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பது.
(உ-ம்.) மரங்கள், ஆடுகள், அவை

2. கீழ் வரும் பெயர்களைப் பால் அறிந்து அட்டவணையில் எழுது :—

அது, அவர்கள், பையன், சிறுமி, ஆடு, குதிரைகள், மரம், அவன், அவள், நாய்.

| ஆண்பால் | பெண் பால் | பலர்பால் | ஒன்றன் பால் | பலவின் பால் |
| --- | --- | --- | --- | --- |
| | | | | |

கேள்விகள் :

1. உன் பள்ளி நூல் நிலையத்தைக் குறித்து ஐந்து வாக்கியங்கள் எழுது.

2. நூல் நிலையங்கள் யார் யாரால் ஏற்படுத்தப்படுகின்றன ?

3. சென்னையில் உள்ள பெரிய நூல் நிலையம் எது ?

4. நூல் நிலையத்தினுல் உண்டாகும் நன்மைகள் எவை ?

5. வாசகசாலையால் உண்டாகும் நன்மை என்ன ?

---

## 13. நிலக்கரி (சுயசரிதை)

1. நான் யார் தெரியுமா? நான் பூமியின் அடியில், வெகு ஆழத்தில், மண்ணோடு மண்ணுய்ப் புதைந்து இருக்கிறேன். என் நிறம் கருமை. பெரும்பாறைவடிவில் நான் பூமிக்கு அடியில் இருக்கிறேன். நான் இருக்கும் இடத்தை எப்படியோ அறிஞர்கள் அறிந்துவிடுகிருர்கள். என்னை வெளியேற்ற அவர்கள் செய்யும் முயற்சி இவ்வளவு அவ்வளவு அல்ல! ஆயிரக்கணக்கான தொழிலாளிகளைக் கொண்டு பூமியில் சுரங்கங்களை வெட்டி, என்னை எடுக்கின்ருர்கள். சுரங்கத் தொழிலாளர்-

களுக்கு என்னால் சில சமயங்களில் ஆபத்து ஏற்படுவதும் உண்டு.




2. பெரும்பாறை வடிவாயுள்ள என்னைப் பல கருவிகள் கொண்டு வெட்டி எடுக்கிறார்கள். பின்பு தண்டவாளங்களில் செல்லும் வண்டிகளில் என்னை ஏற்றி நிரப்பி, பூமிக்கு மேலே கொண்டு வருகிறார்கள். மின்சார விளக்குகளும் எந்திரங்களும் தொழிலாளிகளுக்குப் பெரிதும் உதவுகின்றன. வெளியில் வந்ததும் என்னைச் சுத்தப்படுத்தி, பல அளவுகளில் பிரித்து, தனித்தனி குவிக்கிறார்கள். பின்பு என்னை உலகில் பல இடங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கு அனுப்புகிறார்கள். பூமிக்கு அடியில் மூச்சு விடக்கூட முடியாமலிருந்த நான், இப்பொழுது எப்படிப் பயன்படுகிறேன் என்பது தெரியுமா?

3. உலகில் உள்ள தொழிற்சாலைகளில் எல்லாம் என்னைக் காணலாம். தொழில் வளர்ச்சிக்கு என்னை நாடாதவர் உலகில் இல்லை. பெரிய இரும்புத் தொழிற்சாலைகளில் என் உதவியின்றி ஒரு வேலையும் நடவாது. இரும்பை உலையில் இட்டு உருக்க என்னைப் பயன்படுத்துகிறார்கள். இரும்புடன் என்னையும் சேர்த்து உருக்கிப் பல வகை இரும்புகள் தயாரிக்கின்றனர். பல வகை வெடி மருந்துகள் தயாரிக்கவும் நான் உபயோகப்படுகிறேன். வாண வெடிகள் செய்யவும் நான் உதவுகிறேன். நான் குளிர்ப்பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு வெப்பத்தை அளித்து இன்பம் ஊட்டுகிறேன். என்னால் உண்டாகும் நன்மைகள் இவ்வளவுதான் என்று எண்ணிவிடாதீர்கள். இன்னும் சொல்கிறேன்; கேளுங்கள்:

4. நீங்கள் புகை வண்டியில் பிரயாணம் செய்திருப்பீர்கள். அப்பொழுது உங்களுக்கு உண்டாகும் சந்தோஷத்திற்கு அளவு இல்லை. புகை வண்டியிலிருந்து நீங்கள் காணும் மலைகள், வயல்கள், ஆறுகள் எல்லாம் உங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சி ஊட்டுகின்றன! அம்மகிழ்ச்சிக்குக் காரணம் யார் தெரியுமா? நானே. என் உதவியாலேதான் புகை வண்டி ஓடுகிறது. என்னை எரித்தே நீராவியை உண்டாக்குகிறார்கள். நீராவியின் சத்தியாலேதான் புகை வண்டி தண்டவாளங்களின்மீது ஓடுகிறது. இது மாத்திரமா! கடல் கடந்து செல்லும் நீராவிக்கப்பலும் என்னாலேதான் செல்கிறது.

5. சிலர் என் நிறத்தைக் கண்டு என்னை வெறுக்கின்றனர். நிறத்தைக்கொண்டு ஒருவரை மதிப்பது அழகு அன்று. என்னால் உண்டாகும்

நன்மைகளை அவர்கள் சிந்தித்துப் பார்ப்பதில்லை. அறிஞர்கள் என்னிடமிருந்துதான் வயிரக்கற்களும் தோன்றுகின்றன என்று கூறுகின்றார்கள். நிலத்திலிருந்து எடுக்கப்படுவதால் எனக்கு 'நிலக்கரி' என்பது பெயர்.

### புதிய சொற்கள்:

| | | |
|---|---|---|
| புதைந்து | கருமை | பாறை |
| முயற்சி | தொழிலாளர் | சுரங்கம் |
| ஆபத்து | கருவிகள் | தண்டவாளம் |
| குவித்தல் | தொழிற்சாலை | இரும்பு |
| உலை | தயாரிக்கின்றனர் | வாணவேடிகள் |
| புகை வண்டி | பிரயாணம் | மகிழ்ச்சி |
| எரித்து | நீராவிக்கப்பல் | வெறுக்கின்றனர் |
| சிந்தித்து | வயிரக்கற்கள் | நிலக்கரி |

### அரும்பதவுரை :

புதைந்து - மறைந்து, பாறை - பெருங்கல், சுரங்கம்- பூமியின் உட்பாகம், ஆபத்து - அபாயம், கருவிகள் - ஆயுதங்கள், தண்டவாளம் - இருப்புப் பாதை, பிரயாணம் - பயணம், உலை - பெரிய அடுப்பு, தயாரிக்கின்றனர்- உற்பத்தி செய்கின்றனர், வெறுக்கின்றனர் - அருவருக்கின்றனர், சிந்தித்து - யோசித்து.

### பயிற்சி :

1. கீழ் வந்துள்ள ரகர றகர பேதங்களையும், லகர ளகர பேதங்களையும் தெரிந்துகொள் :—

| | |
|---|---|
| பாரை — பாறை | வலம் — வளம் |
| கரி — கறி | குலம் — குளம் |
| எரி — எறி | வலை — வளை |
| உரை — உறை | காலை — காளை |
| அரை — அறை | வேலை — வேளை |
| மரை — மறை | அலை — அளை |
| அரம் — அறம் | கோல் — கோள் |

2. கீழ் வரும் சொற்களில் உள்ள எழுத்துப் பிழைகளைக் கண்டுபிடி :—
   1. இராமன் மறம் ஏரினான்.
   2. முருகன் பூமியை வளம் வந்தான்.
   3. பாட்டிற்கு உறை கூறு.
   4. சீதை குலத்தில் குளித்தாள்.
3. கீழ் வரும் சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமைத்துக் காட்டு :—

   தண்டவாளம், சுரங்கம், வாணவெடிகள், சிந்தித்து.

### கேள்விகள் :

1. நிலக்கரியை எங்கிருந்து எடுக்கிறார்கள் ?
2. நிலக்கரி நமக்கு எப்படி உபயோகப்படுகிறது ?
3. பூமியிலிருந்து வெட்டி எடுக்கப்படும் வேறு பொருள்கள் எவை ?

---

## 14. மகாபலிபுரம்

1. மகாபலிபுரம் சென்னைக்குத் தெற்கே முப்பத்தைந்து மைல் தூரத்தில் உள்ளது. அது கடற்கரை ஓரத்தில் இப்பொழுது சிறு கிராமமாகக் காணப்படுகிறது. பல்லவ அரசர்கள் காலத்தில் அது ஒரு பெரிய துறைமுகப்பட்டினமாய் இருந்தது. ஆயிரத்து அறுநூறு ஆண்டுகட்கு முன் பல்லவ அரசர்கள், காஞ்சீபுரத்தைத் தலைநகராகக் கொண்டு, சோழ நாட்டை ஆண்டு வந்தார்கள். அவர்களுள் மிகச் சிறந்த போர் வீரர் நரசிம்ம வர்மர். அவர் பல போர்களில் வெற்றி கொண்டவர். 'மாமல்லர்' என்றும் சிறப்பாக அவரை வழங்குவதுண்டு.

2. நரசிம்மவர்மரும் அவர் தந்தையாரான மகேந்திர வர்மரும் மலைகளில் பல வகைச் சிற்பங்களைச் செதுக்குவித்தனர். அந்தச் சிற்பங்களைக் கண்டு மகிழாதவர் இல்லை. பல நாட்டவர்களும் அந்தச் சிற்பங்களைக் காண மகாபலி புரத்திற்கு வருகின்றனர்கள். அங்குப் பாண்டவ இரதங்கள் என்று வழங்கும் ஐந்து கற்கோயில்கள் உள்ளன. அவை ஒரே கல்லினல்குடைந்து செய்யப்பட்ட கோயில்களே. அவை மிக நுண்ணிய வேலைப்பாடுகள்



அமைந்தவை. அங்கு ஒரே கல்லினல் செய்யப்பட்ட யானை, சிங்கம் முதலியனவும் உள்ளன. அவை உயிர் உள்ளன போலக் காணப்படுகின்றன.

3. கடற்கரையின் அருகில் ஒரு பழங்கோயில் இருக்கிறது. அது சிதைந்து காணப்படுகின்றது. பழங்காலப் பெருமையை உணர்த்த அங்கு ஒரு

புறம் இலிங்கமும் மறு புறம் பள்ளி கொண்ட திருமால் உருவமும் உள்ளன. மகாபலி புரத்தில் மலைகளைக் குடைந்து செய்த மண்டபங்கள் சில உள்ளன. அவற்றுள் சிறந்தது, மகிடாசுரமர்த்தனி மண்டபம்.

4. மண்டபங்களே அல்லாமல், சிறு மலைப்பாறைகளில் புராதனக் கதைகளும் சிற்ப வடிவில் திகழ்கின்றன. கண்ணன் கோவர்த்தனம் என்னும் மலையைத் தாங்கும் காட்சியைக் கண்டு சிறுவர் மகிழ வேண்டும். அருச்சுனன் தவத்தை விளக்கும் சிற்பமும் சிறு பாறையில் செதுக்கப்பட்டுள்ளது.

5. மகாபலிபுரம் பழங்காலத்துச் சிறந்த துறைமுகப்பட்டினம். பல கலங்கள் நாள்தோறும் அங்கு வந்து தங்கும். அங்குக் கப்பல்களுக்கு வழி காட்டக் கலங்கரை விளக்கம் ஒன்றும் அமைந்துள்ளது. இப்படிப்பட்ட சிறந்த ஊரைக் கண்டு களியுங்கள்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| துறைமுகம் | பட்டினம் | சிற்பங்கள் |
| காஞ்சீபுரம் | மண்டபங்கள் | இரதங்கள் |
| வேலைப்பாடுகள் | மகாபலிபுரம் | குடைந்து |
| இலிங்கம் | மர்த்தனி | மகிடாசுரன் |
| பல்லவர் | பாண்டவர் | செதுக்குவித்தனர் |
| பள்ளி கொண்ட | புராதனம் | கோவர்த்தனம் |
| அருச்சுனன் | திருமால் | கலங்கள் |
| காட்சி | கலங்கரை விளக்கம் | தவம் |

## அரும்பதவுரை :

துறைமுகம் - கப்பல்கள் வந்து தங்கும் இடம், போர் - சண்டை, சிற்பங்கள் - கல்லில் செதுக்கப்படும் உருவங்கள், வேலைப்பாடு - சித்திரத் தொழில், திருமால் - விஷ்ணு, மகிடாசுரன் - எருமைக்கடா உருவிலுள்ள அசுரன், மர்த்தனி - அடக்குபவள், கலங்கரை விளக்கம் - கப்பலுக்குக் கரையை விளக்கும் விளக்கு.

## பயிற்சி :

1. இவற்றைக் கவனி :—

கடல்+கரை=கடற்கரை
கல்+கோயில்=கற்கோயில்
போர்+கோலம்=போர்க்கோலம்
சித்திரம்+தொழில்=சித்திரத்தொழில்

2. கீழ் வரும் சொற்களைச் சேர்த்து எழுது :—

பல்+பொடி —
கல்+சட்டி —
தேர்+சக்கரம் —
மரம்+பலகை —

3. கீழ் வரும் சொற்களைப் பிரித்துக் காட்டு :—

மணற்பரப்பு —
முட்செடி —
உயிர்ச்சிற்பம் —
கலங்கரை —

## கேள்விகள் :

1. மகாபலி புரம் எங்குள்ளது ?
2. அது இப்போது எப்படிக் காணப்படுகிறது ?
3. பாண்டவர் இரதம் என்பது எவற்றுக்குப் பெயர் ? அப்பெயர் வரக் காரணம் என்ன ?
4. கலங்கரை விளக்கம் — பொருள் என்ன ?
5. மகாபலி புரச் சிற்பங்களைச் செதுக்குவித்தவர் யார் ?

---

# 15. தியாகச் சிந்தை

வனம்ஒன்றில் ஒருவேடன்
வளர்குருவிக் கூட்டினொடும்
இனம்ஒன்று வேட்டைக்கரு
விகளும்எடுத் தேதிரியக்
கனம்இருண்டு மழைபெய்யக்
காற்றெழும்ப அவன்நடுங்கி
மனம்இருண்டோர் மரத்தின்கீழ்
வந்திருந்தான்; அப்போது 1

தங்கிஅதன் மேலிருந்த
புருவொன்று தன்பேட்டை
'எங்ககன்ற தோ!வனத்தில்
யாரேனும் பிடித்தாரோ!
மங்கியதோ!' எனப்புகல,
அதுகேட்டு வனசரன்தன்
அங்கையுறு கூட்டில் உற்ற
பெண்புரு அழுதுசொலும்: 2

'முன்வினையால் இதுபெற்றேன்!
ஆயினும்உன் முனம்அடைந்த
இன்னவனுக்கு உபசாரம்
புரி,' எனலும், எரிகொளுவி
அன்னவனை அழைத்துஉடலின்
குளிர்போக்கி, 'ஆகாரம்
என்னைநீ அருந்தெ'ன்று
வீழ்ந்துஇறக்க, இவன்நோக்கி 3

'அன்பினல் நம்பொருட்டு
வீழ்ந்தஇதை அருந்தியிடில்
துன்பம்வரும்,' எனப்பேட்டை
விடுத்திடலும், சூழ்ந்ததுவும்

தன்புருடன் பிரிவதனல்
 வீழ்ந்திறக்கத் தகுமிரண்டும்
இன்பமுறு தெய்வவுரு
 எய்திவான் உலகடைந்த. 4

பஞ்சதந்திரப் பாடல்] [வீரமார்த்தாண்ட தேவர்

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| வனம் | வேடன் | வேட்டைக்கருவி | கனம் |
| பேட்டை | வனத்தில் | மங்கியது | வனசரன் |
| அங்கை | முன் வினை | உபசாரம் | அருந்து |
| சூழ்ந்து | எரி கொளுவி | பிரிவு | தெய்வவுரு |
| வான் உலகு | எய்தி | போக்கி | எய்தி |

அரும்பதவுரை :

வனம் - காடு, இனம் - கூட்டம், கருவி - ஆயுதம், கனம் - மேகம், பேட்டை - பெண் புறுவை, மங்கியதோ - இறந்ததோ, வனசரன் - வேடன், அங்கை - அழகிய கை, முன் வினை - முற்பிறவியில் செய்த பாவம், உபசாரம் - விருந்தினருக்கு வேண்டுவனவற்றைச் செய்தல், எரி கொளுவி - தீ மூட்டி, அருந்தியிடில் - உண்டால், வான் உலகு - தேவ லோகம்.

பயிற்சி :

இலக்கணம் :

அறுவகைப் பெயர்கள் :

1. பெயர்ச்சொற்கள் ஆறு வகைப்படும். அவை, பொருட்பெயர், இடப்பெயர், காலப்பெயர், சினைப்பெயர், பண்புப்பெயர், தொழிற்பெயர் என்பனவாம்.

பொருட்பெயர், ஒரு பொருளின் பெயரைக் குறிக்கும்.
(உ - ம்.) மரம், இராமன், பசு, நாற்காலி.

இடப்பெயர், ஓர் இடத்தின் பெயரைக் குறிக்கும்.
(உ - ம்.) சென்னை, கிராமம், கோயில், பள்ளி.

காலப்பெயர், காலத்தின் பெயரைக் குறிக்கும்.
(உ - ம்.) வருஷம், மாதம், நாள், நிமிஷம்.

சினைப்பெயர், உறுப்பின் பெயரைக் குறிக்கும்.
(உ - ம்.) கண், தலை, கை, காய், இலை.

பண்புப்பெயர், குணத்தின் பெயரைக் குறிக்கும்.
(உ - ம்.) கருமை, வெண்மை, இனிமை.

தொழிற்பெயர், ஒரு தொழிலின் பெயரைக் குறிக்கும்.
(உ - ம்.) ஓடல், ஆடல், வருதல், உண்ணுதல்.

2. கீழ் வரும் பெயர்களின் வகையைக் குறிப்பிடு :—
வீடு, வாரம், செம்மை, மூக்கு, வேர், சீதை, ஆட்டம், வருகை.

## கேள்விகள் :

1. வேடன் எங்கு எதன்பொருட்டுத் தங்கினான் ?
2. ஆண் புறா என்ன சொல்லி வருந்திற்று ?
3. பெண் புறா ஆண் புறாவுக்குக் கூறியது என்ன ?
4. இக்கதையால் நாம் அறியும் நீதி என்ன ?

# 16. காகிதமும் அதன் பயனும்

1. நாம் படிக்கும் புத்தகமும், எழுதும் குறிப்புப் புத்தகமும் காகிதத்தால் செய்யப்பட்டவை அல்லவா? காகிதம் எதனல் எப்படித் தயாரிக்கப்படுகிறது? அதன் உபயோகம் என்ன? இவற்றைப் பற்றி இப்பாடத்தில் கவனிப்போம்:

2. முன்காலத்தில் ஓலைகளிலும் மரப்பட்டைகளிலும் எழுத்தாணியால் எழுதிப்படித்து வந்தார்கள். செப்புத் தகடுகளிலும், கற்சுவர்களிலும் அரசாங்க நிகழ்ச்சிகள் செதுக்கப்பட்டன. அவற்றுக்குச் 'சாசனம்' என்பது பெயர். காகிதம் இல்லாமையால் அக்காலத்தில் கல்வி வளர்ச்சிக்கு வசதி இல்லை. பெரும்புலவர்களின் வீட்டிலேதான் ஏட்டுச்சுவடியைக் காணலாம். அதைப் பார்த்துத்தான் மற்றவர்கள் ஏடு தயாரிக்க வேண்டும். அதற்குப் பொருள் அதிகம் செலவாகும்.

3. இக்காலத்தில் அப்படி இல்லை. ஏராளமான காகிதங்கள் இயந்திரத்தால் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதற்குத் துணையாக அச்சு இயந்திரங்களும் பெருகியுள்ளன. அதனல், ஏராளமான புத்தகங்களும், பத்திரிகைகளும் நாள்தோறும் வெளி வருகின்றன. காகிதம் தயாரிக்கும் முறைகளைக் கவனிப்போம்.

4. முதல் முதல் காகிதம் கையினல் தயாரிக்கப்பட்டது. காகிதம் செய்பவர்கள் கிழிந்த ஆடைகளைச் சேர்த்துச் சுத்தி செய்வார்கள்; பின்பு அவற்றை நீரோடு கலந்து அரைப்பார்கள். அது ஒருவகைக் கூழ் போலத் தோன்றும். அதை ஜல்-

லடையைப் போன்ற சிறு துவாரங்கள் உள்ள ஒரு கருவியில் வார்ப்பார்கள். நீரெல்லாம் வடிந்துவிடும். நீர் வடிந்த கூழ்ப்படிவே காகிதத்தாள் ஆகும். இப்படி உண்டான தாள்களை எல்லாம் சேர்த்து, அழுத்தும் இயந்திரத்தில் இட்டு அழுத்துவார்கள். அவை ஈரம் உலர்ந்ததும் காகிதங்களாகும்.

5. இப்போது மேல் நாடுகளில் காகிதங்கள் ஏராளமாகச் செய்யப்படுகின்றன. அங்குப் பெரிய பெரிய காகித ஆலைகள் உள்ளன. அவற்றில் உள்ள இயந்திரங்கள் ஒரு நாளில் இலட்சக் கணக்கான காகிதச் சிப்பங்களை உற்பத்தி செய்துவிடும்.

6. கனடா முதலான தேசங்களில் வளரும் ஒரு வகை மரங்களே காகிதக் கூழ் செய்யப் பயன்படுகின்றன. அம்மரத்துண்டுகளைக் கூழாக்கி இயந்திரத்தில் இடுவார்கள். இயந்திரத்தில் அமைந்த பல உறுப்புக்கள் வேலை செய்கின்றன. இயந்திரம் கூழை நீண்டு அகன்ற ஒரு சட்டத்தில் செலுத்திக் காகிதமாக மாற்றுகின்றது. காகிதம் உடனுக்குடன் பல உருளைகளில் சென்று ஈரம் உலர்த்தப்பட்டுப் பெரிய உருளைகளில் சுற்றிக்கொள்கின்றது. பின்பு இயந்திரம் அதைப் பல அளவுகளில் வெட்டி, சிப்பம் சிப்பமாகக் கட்டுகிறது. இங்கிலாந்து முதலிய மேல் நாட்டிலும் கல்கத்தா முதலான இடங்களிலும் காகித ஆலைகள் உள்ளன.

7. நாம் எழுதவும், படிக்கவும், சித்திரம் வரையவும் மட்டும் காகிதம் உபயோகப்படவில்லை; அரசாங்க அலுவல்களும் காகிதங்களினாலே தான் நடைபெறுகின்றன; நாணய நோட்டுக்களும்

காகிதத்தால் ஆனவைகளே. பல வகை வண்ணக் காகிதங்களினுல் அலங்காரப் பூக்கள், கொடிகள், தோரணங்கள் முதலியவற்றைச் செய்கின்றனர்.

8. காகிதங்களில் பல வகை உண்டு. கிளேஸ் காகிதம் புத்தகம் அச்சிடவும் எழுதவும் பயன்படும். அது பால்போல வெண்மையாய் இருக்கும். காங்கர் காகிதம் வியாபாரக் கணக்குப் புத்தகம் அமைக்க உதவும். பழுப்புக் காகிதம் உறைகள் செய்யப் பயன்படும். டிஷ்யூக் காகிதம் மெல்லியதாயும், காற்றில் பறக்கக் கூடியதாயும், பல நிறங்-களை உடையதாயும் இருக்கும். அது காற்ருடி செய்யவும் பூ வேலைகள் செய்யவும் பயன்படும்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| காகிதம் | பனை ஓலை | சாசனங்கள் |
| உபயோகம் | மரப்பட்டை | ஏட்டுச்சுவடி |
| உற்பத்தி | இயந்திரம் | பத்திரிகை |
| ஜல்லடை | துவாரம் | தாள் |
| ஆலைகள் | சட்டம் | உலர்தல் |
| ஈரம் | சித்திரம் | வரையவும் |
| வண்ணம் | அலங்காரம் | சிப்பம் |

அரும்பதவுரை :

உபயோகம் - பயன், சாசனம் - கல்வெட்டு, ஏட்டுச் சுவடி - ஓலைச்சுவடி, பத்திரிகை - செய்தித்தாள், சாதனம் - கருவி, தாள் - காகிதம், ஆலை - இயந்திரம், உலர்தல்-காய்தல், சித்திரம் - படம், வண்ணம் - நிறம், அலங்காரம் - அழகு.

பயிற்சி :

1. கீழ் வரும் சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமை :—
பத்திரிகை, கூழ், இயந்திரம், மரப்பட்டை, உற்பத்தி.

2. எதிர் மொழி கூறு :—
மேல் நாடு × ——.
ஏராளம் × ——.
பெருகி × ——.

174936

கேள்விகள் :

1. முன் காலத்தில் மக்கள் எவற்றில் எழுதி வந்தார்கள் ?
2. கையினல் காகிதம் தயாரிக்கும் முறை யாது ?
3. காகிதத்தினல் உண்டாகும் நன்மைகள் யாவை ?

---

## 17. கடிதம் எழுதுதல்

ஊரில் உள்ள நண்பருக்காவது உறவினருக்காவது நாம் கடிதம் எழுதிச் செய்திகளைத் தெரிவிக்கிறோம் அல்லவா ? அது தபால் கடிதம். பள்ளி ஆசிரியர்க்கு நாம் எழுதும் கடிதத்திற்கு விண்ணப்பக் கடிதம் என்பது பெயர். கடிதம் எப்படி எழுதுவது ?

நாம் எழுதும் கடிதத்தின் முகப்பில் வலப்புறத்தில் நம் விலாசத்தை எழுத வேண்டும். கடிதம் யாருக்கு எழுதுகிறோமோ, அவர்களுக்கு ஏற்றபடி 'அன்புள்ள ஆசிரியர்க்கு' என்றும், 'அருமைத் தம்பிக்கு' என்றும் கடிதத்தில் இடப்பக்கம் ஓரத்தில் சிறிது இடம் விட்டு ஆரம்பிக்க வேண்டும்.

அதன்கீழ் முதலில் நம் நலத்தைத் தெரிவித்து, நாம் யாருக்குக் கடிதம் எழுதுகிறோமோ, அவர் நலத்தை அறிய விரும்புவதாக எழுத வேண்டும். விண்ணப்பக் கடிதத்தில் இதை எழுதக் கூடாது. பின்பு நாம் எழுதும் விஷயத்தைத் தெளிவாக எழுத வேண்டும். கடிதத்தில் கீழே வலப்புறக் கோடியில் 'உங்கள் கீழ்ப்படிதலுள்ள மாணவன், உன் அருமைச் சகோதரன்' என்பவை போன்ற உரிமையைத் தெரிவிக்கும் சொற்களை எழுதி, அவற்றின் கீழே கையொப்பம் இட வேண்டும். பின்பு கடிதத்தை மடித்து, உறையில் இட்டு, விலாசம் எழுத வேண்டும். மாதிரிக் கடிதங்களைக் கவனி:

### 1. ஆசிரியருக்கு எழுதிய கடிதம்

7, பெருமாள் செட்டித் தெரு,
புரசைப்பாக்கம், சென்னை,
22-8-1955

அன்புடைய ஆசிரியர் அவர்களே,

வணக்கம்! நேற்று ஊரிலிருந்து எங்கள் சுற்றத்தார்கள் வந்திருக்கின்றார்கள். அவர்கள் இன்று என்னை உயிர்க்காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார்கள். நான் அவர்களுடன் சென்று உயிர்க்காட்சிச் சாலையில் நீங்கள் எனக்குக் காட்டிய எல்லாவற்றையும் அவர்களுக்குக் காட்ட விரும்புகிறேன். தயவு செய்து ஒரு நாள் ஓய்வு அளிக்கும்படி உங்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

உங்கள் பணிவுள்ள மாணவன்,
மதிவாணன்.

ஆசிரியர் அவர்கள்,
நான்காம் வகுப்பு,
சர். எம். சி. டி. முத்தையா செட்டியார்
ஆரம்பப் பாடசாலை,
புரசைப்பாக்கம், சென்னை—7

## 2. தந்தையாருக்கு எழுதிய கடிதம்

115, தங்கசாலை,
சென்னை,
15-9-1955

அன்புள்ள அப்பா,

வணக்கம்! இவ்விடம் அனைவரும் நலம். இது போல அவ்விடம் உள்ள அனைவர் நலத்தையும் அறிய ஆவலாயிருக்கிறேன். நான் நன்றாகப் படிக்கிறேன். என்னிடம் என் ஆசிரியர் மிகவும் அன்பாய் இருக்கிறார். அவர் சொற்படியே நான் நடந்து வருகிறேன். ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களை அன்றாடம் படித்து ஒப்பித்து வருகிறேன்.

அடுத்த வாரம் காலாண்டு பரீட்சை ஆரம்பமாகிறது. எனக்கு ஒரு நல்ல பேனா வேண்டும். நீங்கள் சனிக்கிழமை சென்னைக்கு வரும் போது கட்டாயம் அதை வாங்கி வரவேண்டும். உங்கள் வருகையை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.

உங்கள் அன்புள்ள புதல்வி,
கயற்கணி.

திருவாளர் மா. பாலசுப்பிரமணியம் அவர்கள்,
உதவி ஸ்டேஷன் மாஸ்டர்,
அரக்கோணம்.

### புதிய சொற்கள்:

| | | | |
|---|---|---|---|
| சுற்றத்தார் | வேண்டிக்கொள் | ஆவல் | ஒப்பித்து |
| உயிர்க்காட்சி | பணிவு | கற்பிக்கும் | கட்டாயம் |
| ஓய்வு | நலம் | அன்றுடம் | வருகை |

### அரும்பதவுரை:

விண்ணப்பம் - பெரியோருக்குப் பணிவுடன் அறிவிப்பு, நலம் - க்ஷேமம், கையொப்பம் - கையெழுத்து, விலாசம் - கடிதம் பெற்றுக்கொள்பவரின் பெயர் முதலிய குறிப்பு, ஓய்வு - ஒழிவு, பணிவுடன் - வணக்கத்துடன்.

### பயிற்சி:

1. நீ கோடை விடுமுறையில் செய்த உல்லாசப் பிரயாணத்தைக் குறித்து உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுது.
2. உன் வகுப்பு ஆசிரியருக்கு உன் தமக்கை திருமணத்திற்காக மூன்று நாள் ஓய்வு தரும்படி ஒரு விண்ணப்பக் கடிதம் எழுது.
3. நீ கண்ட பொருட்காட்சிச் சாலையைக் குறித்து ஊரில் உள்ள உன் தகப்பனாருக்கு ஒரு கடிதம் எழுது.

### கேள்விகள்:

1. கடிதத்தின் தலைப்பு மூலையில் எழுதுபவர் விலாசத்தை எழுதுவதனால் பயன் என்ன?
2. எழுதுபவர் தம் நலத்தைப்பற்றி எப்பொழுது எழுதக்கூடாது?
3. உறையின்மேல் விலாசம் எழுதும் போது கவனிக்க வேண்டுபவை எவை?

# 18. பழமொழிகள்

நம் வீட்டில் உள்ள பெரியோர்கள் அடிக்கடி கூறும் பழமொழிகளை நாம் கேட்டு வருகிறோம். அவை நம் முன்னோர் நெடுங்காலமாய் வழங்கி வந்தவை. அப்பழமொழிகள், நாட்டிற்கு நாடு, பாஷைக்குப் பாஷை, வேறுபடும். அவ்விதம் வேறுபட்டாலும், அவற்றின் கருத்துக்கள் பெரும்பாலும் ஒத்தே இருக்கும். ஒரு நாட்டின் பழமொழிகளிலிருந்து அந்நாட்டின் ஒழுக்கம், கலை, வாணிபம், தொழில் முதலியவற்றைப் பற்றி நாம் உணர முடியும்.

கூழானாலும் குளித்துக் குடி.

கந்தையானாலும் கசக்கிக் கட்டு.

என்னும் பழமொழிகள், கூழாயிருந்தாலும் குளித்த பிறகே குடிக்க வேண்டும் என்பதையும், கிழிந்த ஆடையாய் இருந்தாலும் தினந்தோறும் அதைத் துவைத்தே உடுத்தல் வேண்டும் என்பதையும் உணர்த்தும்.

கரும்பு தின்னக் கூலி வேண்டுமா?

கரும்பு இனிப்புள்ளது. அதைச் சிறுவரும், பெரியவரும் விரும்புவர். அதைத் தின்பதற்குக் கூலி தரவேண்டுமா? வேண்டா. அதைப்போலவே நல்ல காரியங்களைச் செய்வது மக்களுக்கு இன்பம் தரும். அதற்கு வேறு பயன் வேண்டுவது இல்லை என்பது இப்பழமொழியின் கருத்து.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.

இப்பழமொழியால் தமிழ் நாட்டு மக்கள் கடல் கடந்தும் வியாபாரம் செய்து வந்தார்கள் என்பது தெரிகிறதல்லவா?

குலத்தொழில் கல்லாமல் பாகம்படும்.

இப்பழமொழி குலத்தொழிலின் எளிமையை உணர்த்துகிறது. நம் முன்னோர்கள் செய்து வந்த தொழிலே நமக்குக் குலத்தொழிலாகும். அதை நாம் கஷ்டப்பட்டுக் கற்க வேண்டுவதில்லை; அது நமக்குச் சுலபமாகவே அமையும் என்பது இதன் கருத்து.

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
புலி பசித்தால் புல்லைத் தின்னுமா ?
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
துள்ளுகிற மாடு பொதி சுமக்குமா ?
சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்.
அடக்கம் ஆயிரம் வராகன் பெறும்.
சுவர் இருந்தால் சித்திரம் எழுதலாம்.
அகல உழுதலின் ஆழ உழுதல் நல்லது.
ஆனைக்கும் அடி சறுக்கும்.
ஆடிப் பட்டம் தேடி விதை.

இப்பழமொழிகள் நம் வாழ்க்கையில் நன்மை செய்பவை.

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| பாஷை | பாகம்படும் | வாணிபம் | அணிதல் |
| இன்ப | குலத்தொழில் | அகம் | பொதி |

அரும்பதவுரை :

அகம் - மனம், சுற்றம் - உறவினர், வாணிபம் - வியாபாரம், பொதி - மூட்டை, பாகம்படும் - பக்குவமடையும், அடி - பாதம், ஆடிப் பட்டம் - ஆடி மாதத்தில் பயிரிடும் காலம்.

கேள்விகள்:

1. 'பழமொழி' என்பது என்ன?
2. புலி பசித்தால் புல்லைத் தின்னுமா?—இப்பழமொழியினால் நீ அறிவதென்ன?
3. அகல உழுதலின், ஆழ உழுவது நல்லது.—இதன் கருத்தென்ன?
4. சிறு துரும்பும் பல்லுக் குத்த உதவும்—இப்பழமொழி நீதியாக அமையும்படி ஒரு கதை எழுது.

---

# 19. சுவிட்ஸர்லாந்து வீரன்—I

1. சுவிட்ஸர்லாந்து, ஐரோப்பிய நாடுகளில் மிகுந்த அழகு வாய்ந்தது. அதில் இயற்கை வளம் சிறந்து விளங்குவதால், உலகில் உள்ள மக்களுள் பலர் அங்கு வந்து தங்கிச் செல்வர். அங்கு உள்ள மலைகளும், ஏரிகளும், எழில் வாய்ந்த தோட்டங்களும், புல் வெளிகளும் காண்பவர் மனத்தைக் கவரும். இப்படிப்பட்ட அழகு வாய்ந்த நகரம், அறுநூறு வருடங்களுக்கு முன் பகைவர்கள் ஆட்சிக்கு உட்பட்டது.

2. ஆஸ்திரிய மன்னன் ஒருவன் சுவிட்ஸர்லாந்தின்மீது படையெடுத்து வந்து, அந்நாட்டைப் பிடித்தான். அவன் தன்னாட்டுக் குடி மக்களுள் பலரை அங்குக் குடியேற்றினான்; தன்னாட்டுப் படை வீரர்களையும் அதிகாரிகளையும் அங்குத் தங்கச் செய்து, மக்களுக்கு யாதொரு தீங்கும் நேராதபடி கவனித்துவந்தான். அதனால், ஆஸ்திரிய மக்கள் சுவிட்ஸர்லாந்தில் தமக்கு வேண்டிய நிலபுலங்களைப் பெற்று இன்பமாய் வாழ்ந்து வந்தார்-

கள். சுவிட்ஸர்லாந்து மக்கள் துன்பத்திற்கு உள்ளானர்கள்.

3. சுவிட்ஸர்லாந்து மக்கள், பெரும்பாலும் மலைகளிலும் மலைச்சாரல்களிலும் தானியங்களைப் பயிர் செய்து, தங்கள் இஷ்டப்படி வாழ்ந்து வந்தார்கள். அவர்கள் ஆடு மாடுகளைப் புல்வெளிகளிலும் மலைச்சாரல்களிலும் மேய்த்து வந்தார்கள். வில் வித்தை அவர்கட்கு ஒரு விளையாட்டாகும். அவர்கள் குறித்த பொருள்மீது குறி தவருமல் அம்பை எய்வார்கள். அவர்கள் மிகுந்த தைரியமும் நாட்டுப் பற்றும் உடையவர்கள்.

4. ஆஸ்திரிய மக்கள் செய்து வந்த அநீதி சுவிட்ஸர்லாந்து மக்களுக்குப் பிடிக்கவில்லை. அயல்



ஆட்சிக்கு அடங்கி வாழ அவர்கள் விரும்பவில்லை. தங்கள் நாடு அடிமை நாடாய் இருப்பதைக் காண அவர்களுக்குச் சகிக்கவில்லை. அயலார்கள் தங்களுக்கு அதிக வரி விதிப்பதை அவர்கள் வெறுத்-

தார்கள்; ஆஸ்திரிய மன்னன் தங்கள் துன்பத்தைப் போக்க முன் வரவில்லை என்பதையும் உணர்ந்தார்கள். ஆகையால், அவர்கள் ஒருங்கு கூடி, அயல் ஆட்சியை ஒழிக்கத் தீர்மானித்தார்கள்.

5. கெஸ்வர் என்ற ஆஸ்திரிய கவர்னர், சுவிட்ஸர்லாந்து மக்களை அவமானப்படுத்தக் கருதினர். அவர் கடைத்தெருவின் மத்தியில் ஒரு கம்பம் நட்டு, அதில் தம் குல்லாவை மாட்டும்படி செய்தார்; அங்கு ஆஸ்திரிய வீரர்களைக் காவலாக நிறுத்தினர்; அவ்வழிச் செல்லும் சுவிட்ஸர்லாந்து மக்கள் அந்தக் குல்லாவுக்கு முழந்தாளிட்டு வணக்கம் செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டார்; வணக்கம் செய்ய மறுத்தவர்களைக் கொல்லக் கட்டளையிட்டார்.

6. சுவிட்ஸர்லாந்து மக்கள் மானத்தோடு வாழ்ந்தவர்கள். குல்லாவுக்குக் கும்பிடு போட அவர்கள் விரும்பவில்லை. அதனால், அனைவரும் ஒற்றுமையுடன் அவ்வழிச் செல்லாமல் இருந்தனர். கடைத்தெரு, மக்கள் போக்கு வரவு அற்றுக் காணப்பட்டது.

புதிய சொற்கள்:

| | | | |
|---|---|---|---|
| இயற்கை வளம் | எழில் | புல் வெளி | ஆட்சி |
| படை வீரர் | மலைச்சாரல் | அநீதி | அதிகாரி |
| ஒழுங்கு | குறி தவருமல் | அடிமை | கவர்னர் |
| கட்டளை | மானம் | ஒற்றுமை | போக்கு வரவு |

அரும்பதவுரை:

இயற்கை வளம் - இயற்கைப் பொருள்களின் செழிப்பு, எழில் - அழகு, கவரும் - வசப்படுத்தும், தீங்கு - தீமை, பற்று - ஆசை, ஆட்சி - ஆளுகை, கவர்னர் - மாகாணத் தலைவர், அவமானம் - இழிவு, மானம் - பெருமை, போக்கு வரவு - நடமாட்டம்.

பயிற்சி :

இலக்கணம் :

வினை முற்று :

1. (1) சுவிட்ஸர்லாந்து மக்கள் மானத்தோடு வாழ்ந்தார்கள்.
   (2) ஆஸ்திரிய மக்கள் சுவிட்ஸர்லாந்தில் குடியேறி வாழ்கிறார்கள்.
   (3) சுவிட்ஸர்லாந்து மக்கள் ஒற்றுமையுடன் அயலாரை வென்று வாழ்வார்கள்.

இம்மூன்று வாக்கியங்களின் ஈற்றில் உள்ள சொற்கள் வினை முற்றுக்கள்.

வாழ்ந்தார்கள் என்பது, தொழில் முடிந்துவிட்டதைக் குறிக்கும். ஆகையால், இது இறந்த கால வினை முற்று.

வாழ்கிறார்கள் என்பது, தொழில் நடக்கிறதை குறிக்கும். ஆகையால், இது நிகழ்கால வினை முற்று.

வாழ்வார்கள் என்பது, தொழில் நிகழப்போவதைக் குறிக்கும். ஆகையால், இது எதிர்கால வினை முற்று.

2. படித்தான், உண்கிறான், செல்வான், ஓடினான், வருவார், பார்க்கிறான், போவோம்.—இவ்வினை முற்றுக்களின் காலத்தைக் குறிப்பிடு.

---

# 20. சுவிட்ஸர்லாந்து வீரன்—II

1. ஆஸ்திரிய கவர்னரான கெஸ்வரின் குல்லாவுக்குச் சுவிட்ஸர்லாந்து மக்கள் வணக்கம் செலுத்தவே இல்லை. அங்கு நாள்தோறும் வீரர் சிலர் குதிரைமீது இருந்து காவல் புரிந்துவந்தனர். இதுவே கெஸ்வருக்கு அவமானமாய் இருந்தது.

சுவிட்ஸர்லாந்து மக்களின் மன உறுதியையும், ஒற்றுமையையும் கண்டு அவர் வியந்தார்.

2. ஒரு நாள் அவ்வழியே அந்நாட்டு வீரன் ஒருவன் தன் மகனுடன் சென்றான். அவன் பெயர் வில்லியம் டெல் என்பது. அவன் ஆடு மாடுகளை மேய்த்து வாழ்பவன். வில் வித்தையில் அவனுக்கு இணை சுவிட்ஸர்லாந்தில் ஒருவரும் இல்லை. கொடுங்கோலாட்சி அவனுக்குப் பிடிக்கவில்லை. அவனைக் கெஸ்வர் குல்லாவுக்கு வணக்கம் செலுத்தும்படி ஒரு வீரன் வற்புறுத்தினான். அவன் வணக்கம் செலுத்த மறுத்தான். உடனே வீரன் அவனை அவன் மகனுடன் கைது செய்து சென்று கெஸ்வர் முன் நிறுத்தினான்.

3. கெஸ்வர் வில்லியம் டெல்லைப் பார்த்து, தம் ஆணையை மறுத்ததற்குக் காரணம் கேட்டார். நாட்டுவீரன் கடவுளுக்கு அன்றி மற்றவர்களுக்குத் தான் வணக்கம் செய்வது இல்லை என்றான். அவன் அஞ்சாது கூறியதைக் கேட்ட கெஸ்வர் வியப்பு அடைந்தார். அவர் அவனை வஞ்சித்துக் கொல்ல நினைத்தார். அவர் டெல்லைப் பார்த்து, "நீ சிறந்த வில் வீரவின் என்று கேள்விப்பட்டேன். இதோ நிற்கும் உன் மகன் தலையில் ஓர் ஆப்பிள் பழத்தை வைத்து, ஐம்பதடித் தூரத்திலிருந்து அம்பை விடு. அப்பழம் இரு துண்டானால், உன்னை மன்னிக்கிறேன். அல்லாவிட்டால், நீ உயிர் இழப்பாய்," என்றார்.

4. டெல், கெஸ்வர் கூறியதைக் கேட்டு மனம் நடுங்கினான். அவன், "என் பிள்ளையை நான் கொல்வதா! நான் பிழை செய்தால் என்னைத் தண்டிக்க வேண்டும். என் கையால் நான் என்

அருமை மைந்தனை எவ்விதம் கொல்வேன்!" என்று முறையிட்டான். அங்குக் கூடியிருந்தவர் கண்ணீர் உகுத்தனர். அப்போது டெல்லின் மைந்தன், பழத்தைத் தன் தலையில் வைத்துக்-



கொண்டு, அம்பு விடுமாறு தந்தைக்குக் கூறினன். மைந்தன் மனவுறுதியைக்கண்ட டெல், கடவுளைத் தொழுது, அம்பை எய்தான். ஆப்பிள் இரு துண்டாகிப் பையன் தலையிலிருந்து வீழ்ந்தது. அனைவரும் சந்தோஷத்தால் ஆரவாரித்தனர். டெல் தன் மைந்தனைக் கட்டியணைத்து முத்தம் கொடுத்தான்.

5. கெஸ்வர் டெல்லைப் பாராட்டினர். ஆயினும், டெல் இரண்டு அம்புகளை ஒரே சமயத்தில் தன் கையில் பிடித்திருந்ததன் காரணம் அவருக்கு விளங்கவில்லை. அவர் டெல்லை நோக்கி, "நீ இரண்டு அம்புகளை ஏன் பிடித்திருந்தாய்?"

என்று கேட்டார். உடனே டெல், "என் குறி தவறி மைந்தன் இறக்க நேர்ந்தால், உம் உயிரை வாங்கவே!" என்று அஞ்சாது மொழிந்தான்.

### புதிய சொற்கள்:

| | | |
|---|---|---|
| இணை | கொடுங்கோல் | வற்புறுத்தினர் |
| கைது செய்து | ஆணை | காரணம் |
| வியப்பு | வஞ்சித்து | வில் வீரன் |
| ஆப்பிள் | தண்டித்தல் | அருமை |
| மனவுறுதி | ஆரவாரித்தல் | பாராட்டினுன் |
| விளங்கவில்லை | குறி | அஞ்சாது |

### பயிற்சி:

1. கீழ்வரும் ணகர னகர வேறுபாடுகளையும், ளகர லகர வேறுபாடுகளையும் கவனி:—

| | |
|---|---|
| ஆணை — ஆனை | வலம் — வளம் |
| பணி — பனி | கலம் — களம் |
| கணி — கனி | தலை — தளை |
| ஆணி — ஆனி | வால் — வாள் |

2. கீழ்வரும் வாக்கியங்களில் உள்ள எழுத்துப் பிழைகளைத் திருத்தி அமை:—

மழை பெய்தது, கழுதை புள் மேய்ந்தது, பலம் தின்ருன், சுவரில் ஆனி அடித்தான், மாங்கணி இணிப்பாயிருக்கும், குளத்தில் ஆளம் இல்லை.

### கேள்விகள்:

1. வில்லியம் டெல் எந்நாட்டு வீரன்? அவன் தொழில் என்ன?
2. டெல் ஏன் கைதியானுன்?

3. டெல் வில் வித்தையில் கெட்டிக்காரன் என்பது எதனால் தெரிகிறது?
4. டெல் அஞ்சா நெஞ்சம் உடையவன் என்பது எதனால் விளங்குகிறது?

---

# 21. சான்றோர் உரை நடை

'சான்றோர் உரை நடை' என்பது, அறிவு நிறைந்தவர் எழுதிய வசன நடையாகும். முன் காலத்து அறிஞர்களுள் பெரும்பாலார், தம் கருத்துக்களைப் பிறர்க்குப் பாடல் மூலமாகவே வெளிப்படுத்தி வந்தனர். காலம் செல்லச் செல்ல, அறிஞர் பலர் தாம் உணர்ந்த விஷயங்களை உரை நடையில் எழுதத் தொடங்கினர். அதைப் பலரும் படித்துத் தம் அறிவைப் பெருக்கலாயினர். நாமும் முன்னோர் எழுதிய உரை நடையைப் படிக்க வேண்டும்; அந்நடையைப் பின்பற்றி எழுதிப் பயில வேண்டும். பொருள் விளங்காத வார்த்தைகளுக்குப் பொருள் அறிய வேண்டும். இப்படிச் செய்து வந்தால், நம் அறிவு பெருகும். சான்றோர் உரை நடைக்குக் கீழே ஓர் உதாரணம் தரப்பட்டுள்ளது. அது யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் என்ற சான்றோரால் எழுதப்பட்டது. அதை நாம் படித்து மகிழலாம்; நாமும் அப்படியே நம் கருத்துக்களை எழுதிப் பழகலாம்.

## தாய் அன்பு

1. உனக்குப் பால் ஊட்டித் தன் கைகளிலே நித்திரை செய்யும்படி உன் கன்னத்தில் இனிமையாகிய முத்தம் கொடுத்தவள் எவள்?—என் தாய்.

2. நித்திரை உன் கண்ணே விட்டு நீங்கின பொழுது நீ உறக்கம் கொள்ளும்படி இனிமையான கீதங்களேப் பாடி நீ அழாதபடி தாலாட்டினவள் எவள் ?—என் நற்ருய்.

3. நீ வியாதியினலும் துன்புறுத்தலினலும் அழுத பொழுது துக்கக்குறியையுடைய உன் கண்ணேப்பார்த்துப் பயந்து அழுதவள் எவள்?-என்மாதா.

4. நீ விழுந்த பொழுது உனக்கு உதவி செய்யும்படி ஓடி வந்து, இனிமையான கதைகளேச் சொல்லி, உன் காயத்தைச் சவுக்கியப்படுத்த உனக்கு முத்தம் கொடுத்தவள் எவள் ?—என் அருமைத் தாய்.

5. நீ பாவம் செய்யாமல் விலகும்பொருட்டும், புண்ணியத்தைச் செய்யும்பொருட்டும், கடவுளிடத்தே அன்பு வைத்து அவரை எந்நாளும் வழிபடும் பொருட்டும் உனக்குப் போதித்தவள் எவள் ?—என்னேப் பெற்ற தாய்.

6. இப்படி உன்னிடத்தில் இவ்வளவு அதிக அன்புள்ளவளாய் இருக்கின்ற உன் மாதாவிடத்திலே நீ எப்பொழுதாவது அன்பில்லாதவனய் நடக்கலாமா ?—நடக்கலாகாது.

7. நீ கடவுளுடைய திருவருளினலே சீவனேடிருக்கும் வரை உன் அன்புள்ள மாதா உனக்காகப் பட்ட பிரயாசைக்கு நீ பிரதிபலன் அளிக்கும்படி விரும்பிக் காத்திருக்க வேண்டும்.

புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| சான்ருேர் | உரை நடை | நித்திரை |
| உறக்கம் | கீதம் | காயம் |
| சௌக்கியம் | புண்ணியம் | மாதா |
| பிதா | பிரயாசம் | பிரதி பலன் |

## அரும்பதவுரை :

சான்றோர் - பெரியோர், உரைநடை - வசன நடை, நாவலர் - புலவர், உறக்கம் - தூக்கம், நற்றாய் - பெற்ற தாய், கீதம் - தாலாட்டுப் பாட்டு, மாதா - தாய், பிதா - தந்தை (மாதா × பிதா), சவுக்கியப்படுத்தி-குணப்படுத்தி, பாவம் - கொடுஞ்செயல், புண்ணியம் - நல்ல செயல் (பாவம் × புண்ணியம்), போதித்தவள்- கற்பித்தவள், திருவருள் - கிருபை, பிரயாசம் - கஷ்டம், பிரதி பலன் - மறு உபகாரம்.

## கேள்விகள் :

1. முன் காலத்து அறிஞர் தம் கருத்தை எதன் மூலமாக அறிவித்தனர்?
2. 'உரை நடை' என்பது என்ன?
3. நாம் சான்றோர் எழுதிய உரை நடையைப் படிப்பதால் அடையும் நன்மைகள் யாவை?
4. தாய் குழந்தைகளுக்குச் செய்யும் அன்புச் செயல்கள் எவை?
5. நீ மாதாவிடம் எவ்விதம் நடக்கலாகாது?
6. நீ தாய்க்குச் செய்யும் பிரதி பலன் யாது?

# 22. பண்டித நேருஜி

1. நம் பாரத நாடு இப்பொழுது சுதந்தரம் அடைந்து விளங்குகின்றது. சுதந்தரம் அடைய அரும்பாடு பட்ட தலைவர்களுள் ஒருவர் பண்டித நேருஜி. இவர் தந்தையார் பண்டித மோதிலால் நேரு. அவர் ஆக்கிராவில் வாழ்ந்து வந்தார். அவர் பெரிய வழக்கறிஞர். அவர் தம் மைந்தர் நேருவை வீட்டிலேயே ஆசிரியர்களை அமர்த்திப்படிக்கவைத்-தார். நேருஜி இளமையிலேயே கல்வியில் தேர்ந்-தார்; பின்னர் இங்கிலாந்துக்குச் சென்று பாரிஷ்-டர் பரீக்ஷையில் தேர்ச்சி அடைந்தார்.

2. நேருஜி இங்கிலாந்தில் இருந்தபோது இந்-தியாவில் சுதந்தரப் போராட்டம் காந்தியடிகள் தலைமையில் தோன்-றியது. மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டார்கள். பல தலைவர்கள் சிறைக்கும் சென்றார்கள். மோதிலா-லும் காந்தியடிகளு-டன் சேர்ந்து நாட்-டின் விடுதலைக்குப் போராடினர்.



பண்டித நேருஜி

3. பண்டித நேருஜி இங்கிலாந்தி லிருந்து இந்தியாவுக்-குத் திரும்பியதும் காந்தி அடிகளின்

தொடர்பைப் பெற்ருர்; சுதந்தரத்திற்காகப் பல போராட்டங்களில் கலந்துகொண்டார்; நாட்டில் பல இடங்களில் சென்று பேசி மக்களுக்குச் சுதந்தர உணர்ச்சியை ஊட்டினர்; பல முறை சிறைக்குச் சென்ருர். இவர் சிறையிலிருக்கும் போதும் தம் காலத்தை வீணுகக் கழிக்கவில்லை; தம் சுயசரிதையையும், உலக வரலாற்றையும் எழுதி முடித்தார். சிறையில் உள்ள செடிகளுக்குக்கூட இவரே நீர் பாய்ச்சுவார். நேருஜியின் குடும்பம் முழுவதும் நாட்டுப்பற்றில் தீவிரமாய் உழைத்தது. நேருஜியின் தாயார், தந்தையார், தங்கைமார், மனைவியார் ஆகிய அனைவரும் நாட்டுச் சேவையில் பங்கெடுத்துக்கொண்டனர்.

4. காந்தியடிகள் நேருஜியின் தீவிர தேச பத்தியையும் தைரியத்தையும் பாராட்டி, இவரிடம் தனி மதிப்புக் காட்டி வந்தனர். நேருஜி பல முறை காங்கிரஸ் பொதுக் காரியதரிசியாராய் இருந்து சிறந்த பணியாற்றினர். இவர் புகழ் பாரத நாடு எங்கும் பரவியது. இவருடைய தளராத உழைப்பையும், உண்மை நாட்டுப் பற்றையும் மக்கள் பாராட்டினர்கள். இவர் பல முறை காங்கிரஸ் மகாசபைக்குத் தலைவராயும் விளங்கினர். காந்தி அடிகளின் கொள்கைகளை நேருஜி உண்மையில் கடைப்பிடித்தார்.

5. பாரத நாடு சுதந்தரம் அடைந்த பின்னரும் இவர் நாட்டின் பணியில் ஈடுபட்டு உழைத்து வருகிருர். இப்பொழுது இவரே நம் நாட்டுப் பிரதம மந்திரியார். இவர் நம் நாட்டின் நன்மைக்கும் உலக சமாதானத்திற்கும் பாடு பட்டு வருகிருர்; சமீபத்தில் அமெரிக்கா, இரஷ்யா முதலிய நாடுகளுக்குச் சென்று சமாதானக் கொள்கையைப்

பரப்பி வந்தார். உலகமே இவர் அறிவையும் திறமையையும் கண்டு இவரைப் பாராட்டுகின்றது.

6. நேருஜி இப்பொழுது இந்தியாவில் உள்ள ஏழை மக்கள் நன்மைக்காகவே பாடுபடுகிறார்; பல திட்டங்களை ஏற்படுத்தி, நாட்டின் பொருளாதாரம், சுகாதாரம், கலாசாரம், தொழில் முதலியவற்றின் அபிவிருத்திக்கு முயன்று வருகிறார். இவர் முயற்சியினால், சுதந்தரம் பெற்ற பின் நாட்டில் பல தொழிற்சாலைகளும், கலை ஸ்தாபனங்களும், நீர்த்தேக்கங்களும் தோன்றியுள்ளன. நேருஜிக்குச் சமீபத்தில் 'பாரத ரத்தினம்' என்னும் சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டது. பாரத நாட்டு மக்களாகிய நாம், இவருக்கு என்றும் நன்றியுடையவர்களாய் நடப்போமாக! வாழ்க நேருஜி!

### புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| பாரதநாடு | சுதந்தரம் | பரீக்ஷை |
| வழக்கறிஞர் | பாரிஷ்டர் | தொடர்பு |
| போராட்டம் | தலைவர்கள் | வரலாற்றை |
| சிறை | நாட்டுச் சேவை | தேசபத்தி |
| தீவிரமாக | பொதுக்கூட்டம் | பணியாற்றினர் |
| காங்கிரஸ் | மகாசபை | ஈடுபட்டு |
| பரவியது | இரஷ்யா | மேதை |
| சமாதானம் | பொருளாதாரம் | சுகாதாரம் |
| திட்டங்கள் | ஆக்கிரா | கலாசாரம் |

### அரும்பதவுரை :

பாரிஷ்டர் - வழக்கறிஞர், சுதந்தரம் - உரிமை, பரீக்ஷை - தேர்வு, போராட்டம் - போரிடுதல், தொடர்பு -

சிநேகம், சிறை - காவல், பணி - தொண்டு, மகாசபை - பெரிய சபை, ஈடுபட்டு - கலந்து, மேதை - அறிஞர், திட்டங்கள்-நடைமுறைக் காரியங்கள், பொருளாதாரம் - செல்வம் ஓங்கும் சாதனம், கலாசாரம் - கலையொழுக்கம்.

## பயிற்சி :

1. கீழ் வரும் சொற்றொடர்களை உன் சொந்தவாக்கியத்தில் அமைத்துக் காட்டு :—

   (1) அரும்பாடு பட்ட
   (2) சுதந்தர உணர்ச்சி
   (3) பங்கெடுத்துக்கொண்டு
   (4) தீவிரமாய் உழைத்து
   (5) தளராத உழைப்பு

2. எதிர் மொழி எழுது :—

   போராட்டம் × ——.
   தீவிரம் × ——.
   மேதை × ——.
   தொடர்பு × ——.

3. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொல்லை அமை :—

   (1) நேருஜி இப்போது —— உள்ள —— மக்கள் —— பாடு படுகிறார்.
   (2) சுதந்தரத்திற்குப்பின் ———— பல நீர்த்தேக்கங்கள் ———— கலை ஸ்தாபனங்கள் ————.
   (3) உலகமே இவர் ———— அறிவையும் ———— கண்டு ————.

## கேள்விகள் :

1. நேருஜியின் தந்தையார் யார்? அவர் புரிந்த தொழில் என்ன?
2. நேருஜிக்கு அவர் தந்தையார் எவ்விதம் கல்வி கற்பித்தார்?

3. நேருஜி இளமையில் எதன்பொருட்டு இங்கிலாந்துக்குச் சென்றார் ?
4. நேருஜி சுதந்தரப் போராட்டத்தில் எவ்விதம் பாடுபட்டார் ?
5. உலகம் நேருஜியை எவ்விதம் பாராட்டுகிறது ?

---

## 23. நகராண்மைக் கழகம்

1. சென்னை ஒரு பெரிய நகரம். அதில் பல இலட்சம் மக்கள் வசிக்கின்றார்கள். அவர்களின் வசதிகளைக் கவனித்து வருவது நகராண்மைக் கழகம்.



நகர ஆட்சி அமைப்பை ஒரு சிறு அரசாங்கம் என்றே கூறலாம். அது மானிட வாழ்க்கையின் எல்லா முக்கிய அமிசங்களையும் கவனிக்கின்றது. சாலைகள், தெருவிளக்கு, தண்ணீர் வசதி, வைத்தியம், ஆரம்பக்கல்விமுதலிய பல வசதிகளை மக்களுக்குச் செய்வதே அக்கழகத்தின் தொண்டாகும்.

2. அக்கழகத்தில் அங்கத்தினர் பலர் இருக்கின்றனர். அவர்கள் பல பிரிவுகளின் (டிவிஷன்களின்) பிரதிநிதிகள். சில ஸ்தாபனங்களும் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அனுப்புகின்றன. எல்லா அங்கத்தினரும் கூடி, தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுப்பர். அவருக்கு மேயர் என்பது பெயர். அவர் தலைமையில் கழகக் கூட்டம் கூடிக் கழக வேலைகளைக் கவனித்து வருகிறது.

3. கழக ஆணையாளர் (கமிஷனர்) என்பவர் நகராண்மைக் கழக நிருவாகத்தை நடத்திவருகிறார். அவர் யோசனையையும் கழகம் கவனித்து வருகிறது. ஆணையாளர் பல சிப்பந்திகளைக்கொண்டு சென்னை நகர நலங்களைக் கவனித்து வருகிறார்.

4. இப்பெரிய நகரத்தை நிருவகிப்பதற்குப் போதிய வருமானம் முக்கியமாக வரி வசூலிப்பதன் மூலம் கிடைக்கிறது. அது இப்போது போதாமையால், அரசாங்கத்தின் உதவியும், பொது ஜனக் கடன்களும் நாடப்படுகின்றன.

5. நகர மக்கள் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். அவர்கள் செலுத்த வேண்டிய வரிகளைக் குறித்த காலங்களில் செலுத்துவதோடு தெருச் சுத்தம், நீரைச் சேதப்படுத்தாமல் இருத்தல் முதலியவைகளைக் கவனிக்கவேண்டும். சென்னையை அழகுமிகுந்த நகரமாக்குதல் நகராண்மைக் கழகத்தின் முயற்சியையும் நகரமக்களின் ஒத்துழைப்பையும் பொறுத்திருக்கின்றது. நகர மக்களின் செழிப்பே, நகராண்மைக் கழகத்திற்கு வெகுமதியாகும்.

## புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| நகரம் | இலட்சம் | கழகம் |
| அமைப்பு | அமிசங்கள் | சாலைகள் |
| தண்ணீர் | ஆரம்பக் கல்வி | தொண்டு |
| அங்கத்தினர் | பிரிவுகள் | பிரதிநிதிகள் |
| மேயர் | நிருவகிப்பதற்கு | ஆணையாளர் |
| சிப்பந்திகள் | வரி வசூல் | பொது மக்கள் |
| சேதம் | ஒத்துழைப்பு | செழிப்பு |

## அரும்பதவுரை :

கழகம் - சபை, அமிசங்கள் - பகுதிகள், அமைப்பு - ஏற்பாடு, தொண்டு - பணி, அங்கத்தினர் - உறுப்பினர், டிவிஷன் - பிரிவு, பிரதிநிதிகள் - மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள், மேயர் - நகரசபைத் தலைவர், நிருவகிக்கப்பட்டு - நடத்தப்பட்டு, சிப்பந்திகள் - வேலை செய்பவர்கள், சேதப்படாமல் - வீணாகாமல்.

## பயிற்சி :

இலக்கணம் (பெயர் எச்சம், வினை எச்சம்)

1. (1) ஆணையாளர் நகராண்மைக் கழக நிருவாகத்தை நடத்தி வருகிறார்.

(2) அவர் யோசனையையும் கழகம் கவனித்து வருகிறது.—இந்த இரு வாக்கியங்களில் தடித்த எழுத்தில் உள்ள நடத்தி, கவனித்து என்ற சொற்கள் வினை எச்சங்களாகும். இவ்விரு சொற்களும் வினைச்சொற்களாய் இருந்தாலும், பொருள் முற்றுப் பெறவில்லை; எச்சமாகவே உள்ளன. இவ்வெச்ச வினைகள் வருகிறார், வருகிறது என்னும் முற்று வினைகளைக்கொண்டு முடிவதால், வினை எச்சம் எனப்படும்.

2\. (1) ஆணையாளர் பொதுமக்கள் கூறும் குறைகளைக் கவனிப்பார்.

(2) அவர் வெள்ளத்தால் அழிந்த இடங்களைப் பார்வையிடுவார்.

இவ்வாக்கியங்களில் கூறும், அழிந்த என்னும் எச்ச வினைகள் குறைகள், இடங்கள் என்னும் பெயர்களைக் கொண்டு முடிவதால், பெயர் எச்சங்களாகும்.

3\. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள பெயரெச்ச வினையெச்சங்களைக் குறிப்பிடு :—

(1) தந்தையார் கோயிலுக்குச் சென்று வந்தார்.
(2) தாயார் வந்த விருந்தினரை உபசரித்தார்.
(3) பசு புல்லை மேய்ந்து வருகிறது.
(4) வந்த பையன் ஓடி மறைந்தான்.

## கேள்விகள் :

1. நகராண்மைக் கழகம் மக்களுக்குச் செய்யும் வசதிகள் எவை?
2. நகராண்மைக் கழக அங்கத்தினர் யாரால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்?
3. 'மேயர்' என்பது யாருக்குப் பெயர்?
4. கமிஷனருக்குரிய வேலை என்ன?
5. பொதுமக்கள் நகராண்மைக் கழகத்துடன் எவ்விதம் ஒத்து உழைக்க வேண்டும்?

# 24. மீன்

1. மீன் நீரில் வாழும் பிராணி. இக்காலத்தில் பலர் தம் வீட்டில் அழகுக்காக மீனை வளர்க்கின்றனர். சிறுவர்கள் மீன்களை அகன்ற கண்ணாடிப் பாத்திரங்களில் இட்டுக் காட்சிப் பொருள்களாகக் கண்டு மகிழ்வார்கள்; மீன்களுக்கு உணவாகப் பூச்சிகளையும், பாசிக் கொடிகளையும் அவ்வப்போது இடுவார்கள். செல்வந்தர் தம் வீட்டில் பெரிய கண்ணாடிப் பெட்டிகளில் பல வண்ணமுள்ள மீன்களை வைத்துக் கண்டு களிக்கின்றனர்.



2. மீன்கள் ஏரி, குளம், ஆறு முதலிய நீர் நிலைகளிலும், கடலிலும் வசிக்கும். கெண்டை, வரால், ஆரால், கெளுத்தி முதலியவை நல்ல தண்-

ணீரில் வாழும்; வாளை, வெளவால், சுறு, திருக்கை, சங்கரா, வஞ்சிரம் முதலிய மீன்கள் கடலில் வசிக்கும்.

3. மீன்கள் நீரில் நீந்துவதற்கேற்ற உடல் அமைப்புக்களைப் பெற்றுள்ளன. மீனின் உடல் முழுவதும் சிறிய செதில்களால் மூடப்பட்டிருக்கும். சுறு மீனுக்கு மாத்திரம் உடலில் செதில்கள் இல்லை. அதன் உடல் தோல் வழுவழுப்பாய் இருக்கும்.

4. நீரில் நீந்துவதற்கேற்ற சிறகுகளை மீன் பெற்றிருக்கிறது. மீனின் கழுத்து, மார்பு, முதுகு, வால் முதலிய இடங்களில் சிறகுகள் அமைந்துள்ளன. அவற்றின் உதவியாலேதான் அது நீரில் நிலைத்திருக்கவும், செல்லவும், திரும்பவும் முடிகிறது. மீன், வாலாகிய துடுப்பை அசைத்து நீந்தும். அப்போது அதைக் கவிழாதபடி செய்வன முதுகும், மார்பும், வாலுமேயாகும். கழுத்துச் சிறகுகளின் உதவியால் மீன் பல திசையும் திரும்பும். சிறகுகள் அதற்குத் துடுப்புக்கள் போல உதவுகின்றன.

5. மீன் நீரில் எவ்விதம் சுவாசிக்கிறது? மீனின் வாய்ப்புறத்தில் சிவந்த சீப்புப் போன்ற ஒரு வகைச் செதில்கள் உள்ளன. மீன் நீரில் செல்லும்போது அடிக்கடி தன் வாயைத் திறந்து திறந்து மூடுமல்லவா? அது வாயைத் திறக்கும் போது, நீர் உள்ளே சென்று, வாய்ச் செதில்கள் வழியாக வெளி வரும். நீரில் கலந்துள்ள பிராணவாயு அப்போது செதில்களில் உள்ள இரத்தக் குழாய் மூலம் சுவாச அறைக்குள் செல்லும். நீரில் உள்ள பூச்சிகள் மீனின் வளைந்த

அரம் போன்ற பற்களால் தடுக்கப்பட்டு உள்ளே சென்றுவிடும். புழு, பூச்சி, அழுக்கு, பாசி முதலியவைகளை மீன் தின்னும். மீன் முட்டைகள் சினை எனப்படும். ஒரு சினையில் ஆயிரக்கணக்கான மிகச் சிறிய முட்டைகள் இணைந்து இருக்கும். மீன் முட்டை இட்டதும், அம்முட்டை நீரில் மிதக்கும்; சூரிய உஷ்ணம் படுவதால் அவற்றிலிருந்து குஞ்சுகள் வெளிப்படும்.

6. பலர் மீனை உணவாகக் கொள்கின்றனர்; ஒரு வகை மீனின் ஈரலிலிருந்து நெய் தயாரிக்கின்றனர். அது மக்கள் உடலுக்குப் பலத்தைக் கொடுக்கிறது. மீன்களைப் பக்குவப்படுத்திப் பெட்டிகளில் இட்டுப் பல நாடுகளுக்கு அனுப்புகின்றனர். கடலோரத்தில் வாழும் மக்கள் மீன் பிடிக்கும் தொழிலினால் ஜீவனம் செய்து வருகின்றார்கள். அரசாங்கத்தார் மீன் பிடிக்கும் தொழிலுக்கு நல்ல ஆதரவு காட்டி வருகின்றனர்.

### புதிய சொற்கள் :

| | | |
|---|---|---|
| பிராணி | கண்ணாடி | பாத்திரம் |
| காட்சிப்பொருள் | பாசிக்கொடி | செதில்கள் |
| சிறகுகள் | உடல் அமைப்பு | நிலைத்திருக்க |
| துடுப்புக்கள் | சுவாசிக்கிறது | சீப்பு |
| பிராணவாயு | இரத்தக்குழாய் | சுவாச அறை |
| ஈரல் | | |

### அரும்பதவுரை :

பிராணி - ஜந்து, காட்சிப் பொருள் - பார்ப்பதற்கு உரிய பொருள், செதில் - பிரால், சிறகுகள் - மீன் உடலில் அமைந்த துடுப்புப் போன்ற உறுப்புக்கள், சுவாச அறை - மூச்சுக் காற்றுச் செல்லும் இடம், சினை - முட்டை, ஜீவனம் - பிழைப்பு, ஆதரவு - உதவி.

## பயிற்சி :

1. கோடிட்ட இடங்களைப் பூர்த்தி செய் :—
   (1) ———— மீன்களை உணவாகக் கொள்கின்றனர்.
   (2) ————ஒரு வகை மீனின்————லிருந்து ———— தயாரிக்கின்றனர்.
   (3) அந்நெய் மக்கள் உடலுக்குப்————.
2. கீழ் வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச்சொற்களின் வகையைக் குறிப்பிடு :—
   (1) மீன் நீரில் செல்லும்போது அடிக்கடி வாயைத் திறந்து செல்லும்.
   (2) மீன் பிடித்தலைச் சிலர் தொழிலாகக் கொண்டுள்ளனர்.
   (3) சில மீன்கள் செம்மை, பசுமை நிறங்கள் வாய்ந்தவை.
   (4) மீன் கடலில் வாழும்.
3. கீழ் வரும் சொற்களைச் சொந்த வாக்கியங்களில் அமை :—

   அடிக்கடி; தயாரிக்கின்றனர், பக்குவப்படுத்தி, காட்சிப்பொருள்.

## கேள்விகள் :

1. சிலர் மீனை எதற்காக வளர்க்கின்றனர் ?
2. கடலில் வாழும் மீன் வகைகள் எவை ?
3. மீன் எப்படிச் சுவாசிக்கிறது ?
4. மீன் நீரில் நிலைத்திருப்பதற்கு அதன் உடல் அமைப்பு எப்படி உதவுகிறது ?
5. மீன் மக்களுக்கு எவ்வெவ்வகையில் பயன்படுகிறது?

———

# 25. பெற்றோர் அன்பு

உற்றவ ரே! என்னைப் பெற்றவ ரே! தினம்
உமக்கே நமஸ்காரம்!
முற்றுமே நீர்செய்த உதவிக்கு நான்என்ன
மொழிவேன் உபசாரம்! 1

தேனினும் அமுதினும் இனிதே எனக்குநீர்
செப்பிய தாலாட்டு;
வானினும் அமரர்க்கு வருமோ இதுபோல
மங்களத் திருப்பாட்டு! 2

பலபொருள் எனக்குச்சம் பாதித்து வைக்கவே
பலவிதம் உழைத்தீரே!
நிலமிசை உம்முயிர்க்கு உயிர்நா னேஎன்று
நினைத்துநீர் பிழைத்தீரே! 3

துக்கங்கள் எல்லாம் நீர்வகித் துக்கொண்டு
சுகம்எனக் களித்தீரே!
மக்களே சகல பாக்கியம் என்றுஎண்ணி
மனம்மிகக் களித்தீரே! 4

—மாயூரம் வேதநாயகம் பிள்ளை

புதிய சொற்கள் :

| | | | |
|---|---|---|---|
| உற்றவர் | நமஸ்காரம் | அமுது | தாலாட்டு |
| உபசாரம் | அமரர் | மங்களம் | திருப்பாட்டு |
| நிலமிசை | பிழைத்தீர் | சுகம் | களித்தீர் |
| சகலம் | பாக்கியம் | துக்கம் | செப்பிய |

அரும்பதவுரை :

உற்றவர் - அடைந்தவர், பெற்றவர் - தாய் தந்தையர், நமஸ்காரம் - வணக்கம், உபசாரம் - வழிபாடு, அமுது - தேவர் உணவு, செப்பிய - சொல்லிய, தாலாட்டு - (தால் + ஆட்டு) நாவை அசைத்துப் பாடும் பாட்டு, அமரர் - தேவர், திருப்பாட்டு - சிறந்த பாட்டு, நிர்வகித்து - தாங்கி, சுகம் - இன்பம், பாக்கியம் - செல்வம்.

பயிற்சி :

1. பெற்றவர், தேன், அமரர் — இச்சொற்கள் முதலில் அமையும்படி ஒவ்வோர் வாக்கியம் எழுது.
2. உழைத்தீர், பிழைத்தீர், களித்தீர் — இச்சொற்கள் ஈற்றில் அமையும்படி ஒவ்வோர் வாக்கியம் எழுது.
3. கீழ் வரும் தொடர்களில் உள்ள பெயர் எச்ச வினை எச்சங்களைக் குறிப்பிடு :—

    (1) நீர் செப்பிய தாலாட்டு
    (2) நீர் செய்த உதவிக்கு நான் என்ன உபசாரம் மொழிவேன் !
    (3) எனக்குச் சம்பாதித்து வைக்கவே பல விதம் உழைத்தீரே !
    (4) உயிர் நானே என்று நினைத்து நீர் பிழைத்தீரே !

இலக்கணம் :

(நிறுத்தக்குறிகள்)

1. நாம் வாசிக்கும் போது நிறுத்தக்குறிகளைக் கவனித்து வாசிக்கப் பழக வேண்டும். இங்குச் சில நிறுத்தக்குறிகளைப்பற்றிக் கவனிப்போம் :

    (.) இது முற்றுப் புள்ளி. இது அமைந்த இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும். (மாத்திரை என்பது கண் இமைக்கும் நேரம்.)

    (,) இது காற்புள்ளி. இது அமைந்த இடத்தில் ஒரு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

(?) இது கேள்விக்குறி. இது அமைந்த இடத்தில் நான்கு மாத்திரை நேரம் நிறுத்தவேண்டும்.

(!) இது ஆச்சரியக்குறி. இது உள்ள இடத்திலும் நான்கு மாத்திரை நேரம் நிறுத்த வேண்டும்.

(" ") இவை மேற்கோள் குறிகள். இங்கும் நிறுத்தி வாசிக்க வேண்டும்.

2. வாக்கிய முடிவில் (.) முற்றுப்புள்ளி வரும். வினா வாக்கிய முடிவில் (?) கேள்விக்குறி வரும். வாக்கியங்களில் சிறிது நிறுத்த வேண்டிய இடங்களில் (,) காற்புள்ளி வரும். ஆச்சரியமாக முடியும் வாக்கியங்களின் முடிவில் (!) ஆச்சரியக்குறி வரும். ஒருவர் சொன்னதை அப்படியே எடுத்துக் காட்ட இருபுறங்களிலும் ("..........") மேற்கோள் குறிகள் வரும்.

3. கீழ்வரும் வாக்கியங்களில் தகுந்த நிறுத்தக்குறிகளை அமைத்துக் காட்டு :—

(1) ஆசிரியர் பாடங்களைக் கற்பிக்கிறார்

(2) வகுப்பில் பாடம் நடக்கும் போது பேசலாமா

(3) இம்மலர் என்ன அழகாய் இருக்கிறது

(4) வண்டு மலரைச் சுற்றிச் சுற்றி வந்து பின்பு அதன்மேல் மெல்ல அமர்ந்து தேனைப் பருகுகிறது

(5) அப்பா நேற்று நான் உனக்குப் புத்தகம் வாங்கித் தருகிறேன் என்று சொன்னார்

### கேள்விகள் :

1. பெற்றோர் யார்? அவரைக் கண்டதும் நாம் என்ன செய்ய வேண்டும்?
2. 'தேனினும் அமுதினும் இனிது.' — எது?
3. பெற்றோர் தம் மக்களுக்குச் செய்யும் அன்புச் செயல்கள் எவை?

—

# 26. கோவூர் கிழார்

## (சிறு நாடகம்)

| | |
|---|---|
| இடம் : | கோவூர் கிழார் வீட்டின் முற்றம் |
| காலம் : | முற்பகல் |
| பாத்திரங்கள் : | கோவூர் கிழார், ஊர் மக்கள் |

I

[கோவூர் கிழார் தம் வீட்டின் முற்றத்தில் அமர்ந்துபலர்க்குப் பாடம்கற்பித்துக்கொண்டிருக்கிறார். அவர்முன் ஊர் மக்கள் ஓடி வந்து முறையிடுகின்றனர்.]

ஊர் மக்கள் : [புலவரை வணங்கி] புலவர் பெருமானே, அபயம்! அபயம்! சோழநாட்டு மக்கள் பெருந்துன்பத்துக்கு ஆளாகியுள்ளார்கள்! குழந்தைகள், பெண்கள் எல்லோரும் கோட்டைக்குள் வாடிப் பசியால் வருந்துகின்றார்கள்!

கோவூர் கிழார் : ஊர் மக்களே, நீங்கள் சொல்வது என்ன விந்தை! சோழ நாட்டிலா உணவுப் பஞ்சம்! காவிரி பாயும் செழிப்புடைய நாட்டில் பஞ்சம் இதுவரையில் தோன்றியது இல்லையே!

ஊர் மக்கள் : புலவர் திலகரே, உண்மைதான்; உணவுக்குப் பஞ்சம் இல்லை. ஆனால், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளியின் கோட்டையைச் சில நாட்களாக முற்றுகையிட்டுள்ளான். கோட்டைக்குள் இருப்பவர்களுக்கு உணவுப் பொருள்கள் செல்ல வழியில்லை. போர் காரணமாகப் போக்கு வரவு தடைப்பட்டன. மக்கள் பசியால் தவிக்கின்றார்கள். குழந்தைகள் அழுகின்றன.

**கோவூர் கிழார்:** எது காரணமாகச் சகோதரர்களுக்குச் சண்டை ஏற்பட்டது?

**ஊர் மக்கள்:** புலவர் நாயகமே, நாடு காரணமாகவே சண்டை ஏற்பட்டது. நீங்கள் உடனே புறப்பட்டு வந்து இரு வேந்தர்களுக்கும் அறிவுரை கூறினல், நாடு நலம்பெறும். புறப்படுங்கள்! புறப்படுங்கள்!

**கோவூர் கிழார்:** ஊர் மக்களே, இதோ வந்துவிட்டேன். நீங்கள் இனிக்கவலையை ஒழியுங்கள்.

[புலவர் பல்லக்கில் புறப்படுகிருர்.]

II

[கோவூர் கிழார் சோழ நாட்டை அடைகிருர். ஜனங்கள் அவரை வரவேற்கின்ருர்கள். அவர் நலங்கிள்ளி முற்றுகையிட்டுள்ள இடத்துக்கு அஞ்சாது செல்கின்ருர். நலங்கிள்ளியும் புலவரைத் தொழுது வரவேற்கிருன். புலவர் கோட்டைக்கதவின் அருகில் சென்று தமது வருகையை நெடுங்கிள்ளிக்குத் தெரிவித்ததும் அவன் கோட்டையின் கதவை உடனே திறந்துவிடுகிருன். அவனுக்குத் தைரியம் வருகிறது. வெளியே வந்து நிற்கின்ருன்.]

**கோவூர் கிழார்:** [நலங்கிள்ளியையும், நெடுங்கிள்ளியையும் பார்த்து] சோழ நாட்டு ஒரு குடியிற்பிறந்த வீரர்களே, உம்முள் ஒருவரை ஒருவர் முற்றுகை இடுவது எனக்கு வியப்பைத் தருகிறது! நீவிர் இருவீரும் ஒரே குலத்தில் தோன்றியுள்ளீர்; ஆத்தி மாலையையே தரித்திருக்கின்றீர். உம்முள் எவர் போரில்தோல்வி அடைந்தாலும், சோழகுலமே தோற்றதாகும்.

இருவரும் வெற்றியடைவது உலகில் இல்லை. நீவிர் சண்டையிடுவது உம் பகைவர்க்கு மகிழ்ச்சியை உண்டாக்கும். ஆகையால், உடனே போரை நிறுத்துங்கள்; சமாதானத்துடன் வாழுங்கள்; உங்கள் ஒற்றுமையைக் கண்டு பகைவர்கள் அஞ்சும்படி செய்யுங்கள்.

**சோழர் :** [இருவரும் தலை வணங்கி] புலவர் பெருமானே, உம் அறிவுரையால் எங்களுக்கு உண்மை நன்கு விளங்கிற்று! நாங்கள் ஒரே குலத்தைச் சார்ந்தவர்கள்; அறியாமையால் சண்டையிடத் துணிந்தோம்; இனிச் சண்டையிடோம்; ஒற்றுமையுடன் வாழ்ந்து சோழர் குடிப்பெருமையைக் காப்போம்.

**கோவூர் கிழார் :** மன்னர்களே, என் உரையைநீங்கள் ஏற்றுக்கொண்டதற்காக நான் மிகவும் களிப்படைகிறேன்! இவ்விதமே உலக முழுவதும் சமாதானம் பெற்று ஒரு குடி மக்கள் போல வாழ்ந்தால், எவ்வளவு நன்மையாயிருக்கும்! நான் விடை பெறுகின்றேன். [செல்கிறார்].

**ஊர் மக்கள் :** கோவூர் கிழார் வாழ்க! சோழமன்னர்கள் வாழ்க! சோழநாடு வாழ்க! [ஆரவாரம் செய்கின்றனர்.]

## அரும்பதவுரை :

முற்றம் - வீட்டின் முன்னிடம், முறையிடல் - குறைகளைச் சொல்லல், அபயம் - தஞ்சம் (சரண் அடைதல்), கோட்டை - அரண்மனை, செழிப்பு - வளம், பஞ்சம் - உணவுக் கஷ்டம், போக்கு வரவு - நடமாட்டம், தவிக்கின்றனர் - கஷ்டப்படுகின்றனர், அறிவுரை - புத்திமதி,

கவலை - துன்பம், வரவேற்றனர் - எதிர் கொண்டழைத்தனர், ஒரு குடி - ஒரே குடும்பம், முற்றுகை - மதிலைச் சூழ்ந்து தாக்கல்.

### பயிற்சி :

#### இலக்கணம் :

1. இப்பாடத்தில் உள்ள வினைமுற்றுக்களை வரிசையாக எடுத்து எழுதி, அவற்றின் காலத்தையும் குறிப்பிடு.
2. பெயர்ச்சொற்களின் வகையைக் குறிப்பிடு.
3. மக்கள், புலவர், வீரர், குழந்தை, ஆத்தி மாலை— திணை, பால், எண், இடம் கூறு.
4. இப்பாடத்தில் வந்துள்ள பெயரெச்ச வினை எச்சங்களை எடுத்து எழுது.
5. (1) நாங்கள் ஒரே குலத்தைச் சேர்ந்தவர்கள்.
   (2) நாங்கள் ஒற்றுமையுடன் வாழ்ந்து சோழர் குடிப் பெருமையைக் காப்போம்—எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்களைக் கண்டுபிடி.

#### கேள்விகள் :

1. சோழநாட்டு மக்கள் கோவூர் கிழாரிடம் ஏன் முறையிட்டார்கள் ?
2. புலவர் இரு வேந்தர்க்கும் கூறிய புத்திமதிகள் யாவை ?
3. இந்நாடகத்தைக் கதையாக எழுதிப்படி.
4. இந்நாடகத்தை உன் நண்பருடன் வகுப்பறையில் நடித்துக் காட்டு.

# 27. படம் பார்த்துக் கட்டுரை எழுதுதல்



# செய்யுட்பாடம்

## 1. வாக்குண்டாம்

நன்றி யொருவற்குச் செய்தக்கால் அந்நன்றி
'என்று தருங்கொல்!' எனவேண்டா—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான்தருத லால்.

அட்டாலும் பால்சுவையிற் குன்றாது; அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லர்;
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளே;சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். 2

உற்ற விடத்தில் உயிர்வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ?—கற்றூண்
பிளந்திறுவது அல்லால் பெரும்பாரம் தாங்கின்
தளர்ந்து வளையுமோ தான்? 3

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா;—மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி யிருக்குமாம் கொக்கு. 4

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்;—அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு. 5

—ஔவையார்

அரும்பதவுரை :

(1) நன்றி - நன்மை (உபகாரம்), நின்று - நிலைத்து, தெங்கு - தென்னை மரம், தாள் உண்ட - வேரின் மூலம் உட்கொண்ட, தலையாலே - (இளநீர் வடிவமாக) உச்சியில், தருதலால் - கொடுத்தலால்.

(2) அட்டாலும் - காய்ச்சினாலும், குன்றாது - (மிகுமேயன்றிக்) குறையாது, அளவளாய் - (பலகாலும்) கலந்து பழகி, நட்டாலும் - சினேகித்தாலும், நண்பு அல்லார் - சினேகிதர் அல்லாதவர், நண்பு அல்லர் - சினேகிதர் ஆக மாட்டார், மேன்மக்கள் - உயர்ந்தோர், சுட்டாலும் - நெருப்பில் இட்டு வாட்டினாலும்.

(3) உற்றவிடத்தில் - துன்பம் நேர்ந்த இடத்தில், வழங்கும் - கொடுக்கும், தன்மையோர் - குணமுடைய மேலோர், பற்றலர் - பகைவர், பணிவரோ - தாழ்வரோ, கற்றூண் - (கல் + தூண்), இறுவது - உடைவது.

(4) அறிவிலர் - புத்தியில்லாதவர், கடக்க - வெல்ல, கருதவும் - நினைக்கவும், மடைத்தலையில் - வாய்க்காலில், உறுமீன் - பெரிய மீன்.

(5) அற்ற - நீர் வற்றிய, அறு - நீங்கிய, உற்றுழி - துன்பம் நேர்ந்த போது, தீர்வார் - விட்டு நீங்குபவர், உறவு - சுற்றத்தார், ஒட்டியுறுவார் - சேர்ந்து வாழ்பவர்.

## 2. நல்வழி

சாதி யிரண்டொழிய வேறில்லை; சாற்றுங்கால்,
நீதி வழுவா நெறிமுறையில்—மேதினியில்
இட்டார் பெரியோர்; இடாதார் இழிகுலத்தோர்;
பட்டாங்கில் உள்ள படி. 1

ஆன முதலில் அதிகம் செலவானால்
மானம் அழிந்து மதிகெட்டுப்—போனதிசை
எல்லார்க்கும் கள்ளனாய், ஏழ்பிறப்பும் தீயனாய்,
நல்லார்க்கும் பொல்லனாம்; நாடு. 2

ஆற்றங் கரையின் மரமும் அரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே?—ஏற்றம்
உழுதுண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர் பணிக்கு. 3

நற்ரு மரைக்கயத்தில் நல்லன்னம் சேர்ந்தாற்போல்
கற்ருரைக் கற்ருரே காமுறுவர் ;—கற்பில்லா
மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் ; முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம். 4

பூவாதே காய்க்கும் மரமுமுள ; மக்களுளும்
ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே ;—தூவா
விரைத்தாலும் நன்ருகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்ருது உணர்வு. 5

—ஔவையார்

அரும்பதவுரை :

(1) சாதி - மக்கள் பிரிவு, சாற்றுங்கால் - சொல்லும் போது, நீதி - நியாயம், வழுவா - தவருத, நெறி - வழி, பட்டாங்கில் - உண்மை நூலில்.

(2) மானம் - பெருமை, மதி-அறிவு, போன திசை- சென்ற திக்கில், கள்ளன் - திருடன், பொல்லனும் - கெட்டவனுவன்.

(3) அரசறிய - அரசர் அறியும்படி, வீற்றிருந்த - சிறப்புற்றிருந்த, விழும் - அழியும், அன்றே - அல்லவா, ஏற்றம் - பெருமை, ஒப்பில்லை - சமானம் இல்லை, பழுது - குற்றம், பணி - வேலை.

(4) கயம் - குளம், காமுறுவர் - விரும்புவர், கற்பு- கல்வி, முகப்பர் - விரும்புவர், முதுகாடு - சுடுகாடு, உகக்கும் - விரும்பும்.

(5) பூவாதே - மலராமல், ஏவாதே - கட்டளையிடாமலே, உணர்வார் - அறிவார், தூவா - தூவி, நன்ருகா - நன்கு முளைவிடாத, வித்து-விதை, பேதை - அறிவில்லாதவன், உணர்வு-அறிவு.

---

## 3. சதகங்கள்

தன்மமதைச் செயல்வேண்டும்; தண்டலைநீள்
நெறியாரே தயவு செய்வார்;
வன்மவினை செயல்வேண்டா; பொய்வேண்டா;
பிறரைஒன்றும் வருத்தல் வேண்டா;
கன்மநெறி வரல்வேண்டா; வேண்டுவது
பலர்க்கும்உப கார மாகும்;
நன்மைசெய்தார் நலம்பெறுவர்; தீமை செய்தார்
தீமையுற்று நலிவர் தாமே. 1

தண்டலையார் சதகம்] [சாந்தலிங்கக்கவிராயர்

சந்தன விருட்சத்தை அண்டிநிற் கின்றபல
தருவும்அவ் வாசனைதரும்;
தங்கமக மேருவை அடுத்திடும் காக்கையும்
சாயல்பொன் மயமேதரும்;
பந்தமிகு பாலுடன் விளவிய தணீரெலாம்
பால்போல் நிறங்கொடுக்கும்;
படிகமணி கட்டுளே நிற்கின்ற வடமும்அப்
படியே குணங்கொடுக்கும்;
அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடில்
அடுத்ததும் பசுமையாகும்;
ஆனபெரி யோர்களொடு சகவாசம் அதுசெயின்
அவர்கள்குணம் வருமென்பர்காண்;
மந்தர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தஅரி
மருக!மெய்ஞ் ஞானமுருகா!
மயிலேறி விளையாடு குகனே!புல் வயல்நீடு
மலைமேவு குமரேசனே! 2

குமரேச சதகம்] [குருபாத தாசர்

அரும்பதவுரை:

(1) சதகம் - நூறு பாடல்களைக் கொண்ட ஒரு நீதி நூல், தன்மம்-தருமம், தண்டலை நீள் நெறியார்-தண்டலை

நீள் நெறி என்னும் தலத்தில் உள்ள சிவபெருமான், வன்மவினை - கொடுஞ்செயல், கன்மநெறி - பாவ வழி, நலிவர் - வருந்துவர்.

(2) விருட்சம் - மரம், தரு - மரம், தங்கம் - பொன், மகமேரு - பெரிய மேரு மலை, சாயல் - நிறம் (அழகு), மயம் - தன்மை, பந்தம் - நட்பு (சேர்க்கை), வடம்-கயிறு, தரித்திடில் - அணிந்தால், பசுமை - பச்சை, சகவாசம் - கூடி வாழ்தல், நெடு - உயரமான, கிரி-மலை, அரி-விஷ்ணு, மருக - மருமகனே, புல் வயல் - முருகர் திருத்தலம், மேவு - பொருந்தியுள்ள, குமரேசனே - குமரக்கடவுளே.

---

## 4. விவேக சிந்தாமணி

ஒப்புடன் முகம லர்ந்தே உபசரித்து உண்மை பேசி
உப்பிலாக் கூழிட் டாலும் உண்பதே அமிர்த மாகும்;
முப்பழ மொடுபா லன்னம் முகங்கடுத் திடுவ ராயின்
கப்பிய பசியி னோடு கடும்பசி ஆகுந் தானே. 1

ஆலிலை பூவுங் காயும் அளிதரு பழமும் உண்டேல்
சாலவே பட்சி எல்லாம் தம்குடி என்றே வாழும்;
வாலிபர் வந்து தேடி வந்திப்பர் கோடா கோடி;
ஆலிலை ஆதி போனால் அங்குவந் திருப்பா ருண்டோ? 2

வானரம் மழைதனில் நனையத் தூக்கணம்
தானொரு நெறிசொலத் தாண்டிப் பிய்த்திடும்;
ஞானமும் கல்வியும் நவின்ற நூல்களும்
ஈனருக்கு உரைத்திடில் இடரது ஆகுமே. 3

அரும்பதவுரை :

(1) ஒப்புடன் - அனைவரும் விரும்பும்படி, முகம் மலர்ந்து - இனிய முகம் காட்டி, உபசரித்து - உபகாரம் செய்து, உண்மை - மனம்கலந்த வார்த்தை, கூழ்-தாழ்ந்த உணவு, அமிர்தம் - தேவாமிர்தம், முப்பழம் - (மா, பலா,

வாழை என்னும்) மூன்று கனிகள், கடுத்து - கோபித்து, கப்பிய பசி - மூடிய பசித்துன்பம், கடும்பசி - கொடிய பசி.

(2) ஆல்-ஆலமரம், அளிதரு-கனிந்த, சால - மிகுதியாக, தம் குடி - தம் இருப்பிடம், கோடா கோடி - மிகப் பல, வந்திப்பர் - வணங்குவர், ஆதி - முதலியவை.

(3) தூக்கணம் - தூக்கணங்குருவி, நெறி-நல்ல வழி, பிய்த்திடும் - கலைத்திடும், ஞானம் - அறிவு நூல், கல்வி - படிப்பு, நவின்ற நூல்-பெரியோர்கள் பாடிய நூல், ஈனர்-தாழ்ந்தவர், உரைத்திடில் - சொன்னால், இடர் - துன்பம்.

---

124926

RTR/157

# SIRUVAR THEENTHAMIZH VACHAKAM

STANDARD IV

BY

C. JAMBULINGAM, M.A., L.T.,

THE TEACHERS' PUBLISHING HOUSE

53-56, CORAL MERCHANT ST., - MADRAS-1

[PRICE Re. 0-9-0